வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 20.06.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 171 பக்கங்கள் : 12

# இம்யூனோகுளோபுலின் மருந்தில் உடலுக்கு தீங்கிழைக்கும் பற்றீரியா!

## ஜேர்மனியில் மேற்கொண்ட ஆய்வில் கண்டறிந்ததாக நீதிமன்றுக்கு தகவல்

கொழும்பு, ஜூன் 20

**நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய 'தரமற்ற இம்யூனோ குளோபுலின் தடுப்பூசி' (Antibody Vaccines) தொடர்பான விசாரணையில், அவற்றில் மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கும் பற்றீரியாக்கள், உப்பு இருந்தமை ஜேர்மனியில் நடத்தப்பட்ட ஆய்வக பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.**

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் பலர் சந்தேகநபர்களாக பெயரிடப்பட்டுள்ள, தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி மருந்துகளை இறக்குமதி செய்த வழக்கு நேற்று வியாழக்கிழமை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்தத் தகவல் வெளியிடப்பட்டது.

இதனிடையே, இந்த விடயம் தொடர்பான வழக்கு விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என்று அரச சட்டத்தரணி நேற்று மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றத்தில் தெரிவித்தார். (ஐ)

# வலி. மேற்கு பிரதேச சபை தமிழ் அரசு கட்சியின் வசம்

## கட்சி மாறி வாக்களித்த உறுப்பினர்!

யாழ்ப்பாணம், ஜூன் 20

வலி. மேற்கு பிரதேச சபையின் ஆட்சியை தமிழ் அரசு கட்சி தன் வசப்படுத்தியுள்ளது. அந்தக் கட்சியின் சண்முகநாதன் ஜெயந்தன் தவிசாளராக தெரிவாகியுள்ளார்.

இதனிடையே தவிசாளர் தெரிவின்போது ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் உறுப்பினர் ஒருவர் இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு ஆதரவாக வாக்களித்திருந்தார். இவ்வாறு வாக்களித்தவர், தான் கட்சி மாறி வாக்களித்து விட்டதாகக் கூறியுள்ளார்.

26 உறுப்பினர்களைக்கொண்ட வலி. மேற்கு பிரதேச சபைக்கு நேற்று நடந்த அதிகார பதவிகளுக்கான தெரிவு நடைபெற்றது.

11

# தமிழ் அரசின் ஆட்சியில் வலி. தெற்கு பிரதேச சபை

யாழ்ப்பாணம், ஜூன் 20

வலி. தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபையில் இலங்கை தமிழ் அரசு கட்சி ஆட்சியமைத்துள்ளது. அந்தக் கட்சியின் தி. பிரகாஷ் தவிசாளராகவும் செ. உதயகுமாரன் உப தவிசாளராகவும் தெரிவாகியுள்ளனர்.

வலி. தெற்கு பிரதேச சபையின் தவிசாளர், உப தவிசாளரை தெரிவு செய்தவற்கான அமர்வு நேற்றைய தினம் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

தமிழ் அரசு கட்சியின் சார்பில் தி. பிரகாஷ், தமிழ்த் தேசிய பேரவை சார்பில் க. அபாரசுதன் ஆகியோன் முன்மொழியப்பட்டனர்.

11

### 2015 - 2019 காலப்பகுதியில்

# வீடமைப்பு அமைச்சில் ரூ. 2,600 கோடி மோசடி!

கொழும்பு, ஜூன் 20

2015 முதல் 2019 வரையான காலப்பகுதியில் வீடமைப்பு அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் ஊடாக 2 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மோசடி இடம்பெற்றுள்ளது என்று துறைக்கு பொறுப்பான பிரதி அமைச்சர் ரி. பி. சரத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் முழுமையான அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்குமாறு அமைச்சு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேசமயம், 2015 - 2019 ஆம் ஆண்டு காலப் பகுதி யில் தற்போதைய எதிர்க்கட்சி தலைவர்

11

### ஆயிரம் ஏக்கர் காணி மோசடி:

# முன்னாள் ஜனாதிபதிகள் இருவருக்கு தொடர்பு உண்டு

கொழும்பு, ஜூன் 20

குருநாகலில் ஆயிரம் ஏக்கர் நில ஒப்பந்தத்தில் முன்னாள் ஜனாதிபதிகள் இருவர், முன்னாள் பிரதி அமைச்சர் சாலிந்த திஸநாயக்க, முன்னாள் பாராளுமன்ற உறுப்பி னர் மஞ்சுள திஸநாயக்க ஆகியோர் ஈடுபட்டுள்ளனர் என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் ரத்நாயக்கா தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

முன்னாள் பிரதி அமைச்சர் நிலத்தை குத்தகைக்கு எடுத்துள்ளார். அதனை பிணையாக

11

### எட்டப்பட்ட உடன்பாட்டின்படி

# காரைநகர் பிரதேச சபை சுயேச்சை குழுவின் வசம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

தலா 16 மாதங்களுக்கு 3 கட்சிகள் தவிசாளர் பதவியை வகிப்பது என்று ஏற்கனவே எட்டப்பட்ட உடன்பாட்டின்படி, காரைநகர் பிரதேச சபையின் தவிசாளராக சுயேச்சை குழுவை சேர்ந்த கி. கோவிந்தராசன் ஒருமனதாக தெரிவு செய்யப்பட்டார். அத்துடன், பிரதி தவிசாளராக தமிழ் மக்கள் கூட்டணியின் ஆ. விஜயராசா தெரிவானார்.

காரைநகர் பிரதேச சபையின் அதிகார பதவிகள் தெரிவு வடக்கு உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

11 உறுப்பினர்களை கொண்ட காரைநகர் பிரதேச சபையில் சுயேச்சை குழு, தமிழ் மக்கள்

11

# 9,190 சிறார்கள் பராமரிப்பு இல்லங்களில்

கொழும்பு, ஜூன் 20

பராமரிப்பு நிலையங்களில் 9 ஆயிரத்து 190 சிறுவர்கள் பராமரிக்கப்படுகிறார்கள் என்று மகளிர், சிறுவர் அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள தரவுகள் மூலம் இந்த விடயம் தெரிய வந்ததாகவும் இந்த சிறுவர்கள் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்களால் நடத்தப்படும் 356 சிறுவர் அபிவிருத்தி மத்திய நிலையங்களில் பராமரிக்கப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனை கருத்தில் கொண்டு இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் நிறுவன பராமரிப்பிலுள்ள சிறுவர்கள், தெருவோரக் குழந்தைகளுக்காக 5 ஆயிரம் ரூபாய் உதவி தொகை வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் மகளிர், சிறுவர் தொடர்பான அமைச்சு கூறியுள்ளது. (ஐ)

# நேற்று கைதான கெஹலியவின் மகள்கள், மருமகனுக்கு பிணை!

கொழும்பு, ஜூன் 20

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவின் மகள்கள் இருவரும் மருமகன் ஒருவரும் நேற்று கைதுசெய்யப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இலஞ்சம் மற்றும்

11

# கடலுக்கு சென்ற மீனவர் மாயம் கொலையானாரா என்று சந்தேகம்!

முல்லைத்தீவு,ஜூன்20

முல்லைத்தீவில் கடலுக்கு சென்ற மீனவர் ஒருவர் காணாமல் போயுள்ளார். தனியாக மிதந்து வந்த அவரின் படகு மட்டும் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன், அவரை தேடும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதனிடையே, அந்தப் பகுதியில் கடந்த சில நாட்களாக சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவோர் என்று கூறப்படும் சிலர், காணாமல்போன மீனவர் உள்ளிட்ட மீனவர்களை அச்சுறுத்தியிருந்தனர் என்றும், இந்த நிலையிலேயே அவர் காணாமல் போயுள்ளதால் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் மீனவர்களோடு, மீனவர் அமைப்புகளும் சந்தேகம் வெளியிட்டுள்ளன.

கள்ளப்பாடு - தீர்த்தக் கரையை சேர்ந்த வின்சன் டி போல் அன்ரனி கருணல் (வயது 62) என்பவரே இவ்வாறு காணாமல் போனவராவார்.

இவர் நேற்று அதிகாலை தனது படகில் தனியாக கடலுக்கு சென்றுள்ளார். இந்த நிலையில் அவரின் படகு மட்டும் தனியாக

11

# செம்மணியில் இன்று போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 20

செம்மணி - அரியாலை மனித புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரி கவனவீர்ப்பு போராட்டம் நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு செம்மணியில் புதைகுழிக்கு அண்மையாக வீதியில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கில் மனித புதைகுழிகள் தொடர்பாக வதந்தி பரப்பப்படுவதாக அரசாங்கம் கூறியுள்ள நிலையில் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழு இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கில் கைவிடப்பட்ட பால் பதனிடும் நிலையங்களை மீளஇயக்குக

## சிறீபவானந்தராஜா எம். பி.

யாழ்ப்பாணம், ஜூன் 20


வடக்கு, கிழக்கில் முன்னர் பல பால் பதனிடும் நிலையங்கள் இருந்தன. அவை தற்போது கைவிடப்பட்ட நிலையில் - செயலற்ற நிலையில் காணப்படுகின்றன. இவற்றை மீள இயங்கச் செய்ய வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீபவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை அவர் பாராளுமன்றில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த காலத்தில் தரமற்ற பசு மாடுகள் இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றுள் பல கருக்கலைப்பு செய்யப்பட்டன. பல நோயுற்ற பசுக்களும் இறக்குமதி செய்யப்பட்டன. நோயுற்ற பசுக்களால் எமது நாட்டு பண்ணைகளிலே இருந்த ஏனைய கால்நடைகளுக்கும் பல நோய்கள் ஏற்பட்டன. இதனால் எமது பண்ணையாளர்களும் பெருமளவில் நட்டம் அடைந்துள்ளனர்.

பால் உற்பத்தியில் மிகப் பெரும் மோசடி இடம்பெற்றுள்ளது. நாட்டுக்கு தேவையான பாலில் 30 வீதமே நாட்டில் உற்பத்தியாகிறது. 70 வீதமானவை இறக்குமதியாகும் பால் உற்பத்தி பொருட்கள், பால் மா மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது. இதனால், பெருமளவு அந்நிய செலாவணியை இழக்கிறோம்.

1.1 கோடி அமெரிக்க டொலர் இழப்பு ஏற்படுத்தப்பட்ட இந்த ஊழல் எமது நாட்டுக்கு ஏற்பட்ட பெரும் இழப்பாகும். வடக்கு, கிழக்கில் முன்னர் பல பால் பதனிடும் நிலையங்கள் இருந்தன. அவை தற்போது கைவிடப்பட்ட நிலையில் - செயலற்ற நிலையில் காணப்படுகின்றன. இவையும் பால் உற்பத்தி பண்ணையாளர்களின் உண்மையான உத்வேகத்தை செயலிழக்க செய்வதாக உள்ளது. எனவே, அவற்றை மீள ஆரம்பிக்க வேண்டும். இது அந்நிய செலாவணியை மீதப்படுத்தவும் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவும் வழிவகுக்கும் - என்றார். (ஐ)



# அமிர்தலிங்கத்தின் சிலைக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 20

வலி. மேற்கு பிரதேச சபையை இலங்கை தமிழ் அரசு கட்சி ஆட்சியமைத்துள்ளது. இதைத் தொடர்ந்து சபையின் முன்பாக அமைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழ் அரசு கட்சியின் முன்னாள் தலைவரும் எதிர்க்கட்சி தலைவரான அ. அமிர்தலிங்கத்தின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில், இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், தவிசாளராக தெரிவான ச. ஜெயந்தன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

வலி. வடக்கு பிரதேச சபை:

# நடுநிலை வகித்தவரிடம் விளக்கம் கோரி கடிதம்!

யாழ்ப்பாணம், ஜூன் 20

வலி. வடக்கு பிரதேச சபையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர் பொன்னம்பலம் இராஜேந்திரம் கட்சியின் தீர்மானத்தை மீறி நடுநிலை வகித்தமை தொடர்பில் கட்சியால் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

ஒரு வார காலத்துக்குள் விளக்கம் அளிக்க வேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் உறுப்பினர் கட்சி உறுப்புரிமையில் இருந்து இடைநிறுத்தப்படுவார் என்றும் தமிழ் அரசு கட்சியின் பொது செயலாளர் எம். ஏ. சுமந்திரன் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

வலி. வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு நேற்று முன்தினம் நடைபெற்றது. வாக்கெடுப்பில் தமிழ் அரசு கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கதிர்காமம் பாத யாத்திரை குழுவுக்கு 10 இலட்சம் ரூபாய் செலவில் உதவிகள்

## சந்நிதியான் ஆச்சிரமம் வழங்கியது


வடமராட்சி, ஜூன் 20

வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் கதிர்காமத்துக்கு பாத யாத்திரை செல்லும் பக்தர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் பெறுமதி யான உதவிகளை வழங்கியுள்ளது.

உகந்தை முருகன் ஆலயத்தில் வைத்து 150 பக்தர்களுக்கு உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

செல்வச்சந்நிதி முருகன் ஆல யத்தில் ஆரம்பமான பாத யாத்திரை உகந்தையை அடைந்துள்ளது. இந்த நிலையில், யாத்திரிகர்கள் அடுத்து பானம, குமண, யால தேசிய பூங்காவை கடந்து சுமார் 10 நாட்கள் கடினமான பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த நிலையில், அவர்களுக்கு தேவையான தண்ணீர், அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



குறித்த உதவிகளை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாக சென்று வழங்கி வைத்தார். (ஐ-02)

# வவுனியா மாநகர சபையின் முத்திரையின்றி பற்றுச்சீட்டு

## பிரதி முதல்வர் நடவடிக்கை

வவுனியா, ஜூன் 20

வவுனியா மாநகர சபையின் முத்திரையின்றி பற்றுச்சீட்டில் கட்டணம் அறவிடப்பட்டமைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாநகருக்கு உட்பட்ட பொது மலசலகூடம், வாகன தரிப்பிடம் என்பவற்றுக்காக பற்றுசீட்டு மூலம் கட்டணம் அறவிடப்படுகிறது. அதில், மாநகர சபையின் முத்திரை பொறிக்கப்படவில்லை.

இது தொடர்பில் தமக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் வவுனியா மாநகர சபை பிரதி முதல்வர் முத்திரையின்றி பற்றுச்சீட்டு விநியோகத்தவர்களை கடுமையாக எச்சரித்தார் என்றும் கூறப்பட்டது. (ஐ)

# மரக்கடத்தலில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஜூன் 20

சட்டவிரோத மரக்கடத்தலில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி - தருமபுரம் - மயில்வாகனபுரத்தில் காட்டுப் பகுதியில் இருந்து சட்டவிரோதமாக மரம் கடத்தப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதற்கமைவாக பொலிஸார் வீதி சோதனையில் ஈடுபட்டனர். இதன்போது, கெப் வாகனம் ஒன்றில் மரக் குற்றிகள் கடத்தப்பட்டமை கண்டறியப்பட்டது.

வாகனத்தை மறித்து சோதனையிட்ட பொலிஸார் 12 நாவல் மரக்குற்றிகளை கைப்பற்றினர். அத்துடன், வாகனத்தை செலுத்தி வந்தவரையும் கைது செய்தனர்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

போதைப்பொருள் விற்பனை:

# கணவன் கைதானார் மனைவி தலைமறைவு

வடமராட்சி, ஜூன் 20

பருத்தித்துறையில் இளைஞர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த தம்பதியரில் கணவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். மனைவி தலைமறைவாகி விட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறையில் இளைஞர்களை குறிவைத்து இருவரும் கஞ்சா, ஐஸ் போதைப்பொருட்களை விற்பனை செய்துள்ளனர். இது தொடர்பில் அறிந்த பொலிஸ் புலனாய்வு பிரிவு அவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் இறங்கியது.

இதைத் தொடர்ந்து, 12 கிராம் 40 மில்லி கிராம் போதைப்பொருட்களுடன் 29 வயதான சந்தேகநபரை பொலிஸார் கைது செய்தனர். அவரின் மனைவியும் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தார் என்று கூறப்பட்ட நிலையில் அவர் தலைமறைவாகி விட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தலைமறைவானவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கைதான வரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# அநுராதபுரத்தில் முல்லை. வாசி துப்பாக்கியுடன் கைதானார்!

கொழும்பு, ஜூன் 20

முல்லைத்தீவை சேர்ந்த நபர் ஒருவர் துப்பாக்கியுடன் அநுராதபுரத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரத்தில் ஓயாமடுவ பொலிஸ் பிரிவில் சந்தேகநபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் 57 வயது நபராவார். அவரிடமிருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபர் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கரைச்சி பிரதேச சபை வடக்கு ஆளுநரிடம் மனு

யாழ்ப்பாணம், ஜூன் 20

கரைச்சி பிரதேச சபையின் ஆளணிகளின் தேவைப்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள் வடமாகாண ஆளுநரை நேரில் சந்தித்து மனு ஒன்றினையும் கையளித்துள்ளனர்.

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ. வேழமாலிகிதன் தலைமையில் பிரதேச சபையின் உபதவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் நேற்று வியாழக்கிழமை ஆளுநர் செயலகத்தில் ஆளுநரை சம்பிரதாயபூர்வமாக சந்தித்து கலந்துரையாடி குறித்த மனுவையும் கையளித்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
20.06.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 07

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# 35 வருடங்களுக்கு பின்னர்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்) தலைவர் பத்மநாபாவின் 35ஆவது நினைவுதினம் அவரின் ஆதரவாளர்களால் நினைவுகூரப்படுகிறது. இந்திய சார்பு நிலையில் ஈழ விடுதலைப் போராட்டத்தை திசைதிருப்ப முற்படுகின்றனர் என்னும் அடிப்படையில் விடுதலை புலிகள் அமைப்பால் பத்மநாபாவும் அவரின் முக்கிய சகாக்களும் தமிழ்நாட்டில் வைத்து படுகொலை செய்யப்பட்டனர்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு மாகாண சபை முறைமைக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியே வடிவம் கொடுத்தது. அன்றைய சூழலில், அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலை கூட்டணி மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்த்த நிலையில், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அந்த வரலாற்று பொறுப்பை ஏற்றுக்கொண்டது.

அன்றைய சூழலில் ஈழ மக்கள் புரடசிகர விடுதலை முன்னணியின் தீர்மானம் துரோகமாக விமர்சிக்கப்பட்டது. ஆனால், இன்று தமிழ் மக்கள் அரசியல்ரீதியில் வந்து சேர்ந்திருக்கும் இடத்தை நோக்கினால் பத்மநாபா தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அன்றைய சூழலில் மேற்கொண்ட சரியானதொரு முடிவு என்றே காலம் உணர்த்தி நிற்கிறது.

ஏனெனில், இன்று நிலைமைகளை திரும்பிப் பார்த்தால் அன்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மேற்கொண்ட சரியானதொரு முடிவின் விளைவாக மாகாண சபை ஒன்றுதான் இன்று எஞ்சியிருக்கிறது. அரசியலில் அதனைத் தவிர்த்து தமிழர்களால் இயங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

உண்மையில், அன்றைய சூழலில் விடயங்களை துரேநோக்குடன் ஆராய்ந்து முடிவு எடுத்திருந்தால் இயக்கங்கள் தங்களுக்குள் விரோதிகளையும் துரோகிகளையும் தேட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. பத்மநாபாவும் கொல்லப்பட்டிருக்கமாட்டார். அன்றைய சூழலில் மாகாண சபையை நீங்கள் நடத்திச் செல்லுங்கள் நாங்கள் ஆயுதப் போராட்டத்தை தொடரப் போகிறோம் என்னும் உடன்பாட்டை விடுதலை புலிகள் அமைப்பு மற்றவர்களுடன் ஏற்படுத்திக் கொண்டிருந்தால் இத்தனை அழிவுகளை காணவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

ஒவ்வொரு வீழ்ச்சியிலிருந்தும் கற்றுக்கொள்ள வேண்டும். வீழ்ச்சிகள் ஒவ்வொன்றும் ஒரு படிப்பினையை தருகின்றது. அந்த படிப்பினைகள் தான் அரசியலில் அடுத்த கட்டத்துக்கான முதலீடு. ஆனால், தமிழ் சூழலில் நடப்பதோ வேறு. இத்தனை அனுபவங்களுக்குப் பின்னரும் போகமுடியாத ஊருக்கு வழி சொல்லிக் கொண்டிருப்பது அரசியல்வாதிகளுக்கு வேண்டுமானால் சுகமான விளையாட்டாக இருக்கலாம் ஆனால், தமிழ் மக்களோ மேலும்மேலும் அதலபாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

இன்று திரும்பிப் பார்த்தால் ஈழத் தமிழர்கள் அரசியல் ரீதியில் ஒன்று மற்றவர்களாக இருக்கின்றனர். ஈழத் தமிழர்களுக்கு வெளியில் நட்பு சக்திகள் இல்லை. ஆரம்பத்தில் இந்தியா ஒரு நட்பு சக்தியாக இருந்தது - உண்மையான நண்பனாக இருந்தது. ஆனால், அதனை கையாள்வதில் ஈழத் தமிழர் பக்கத்தில் வரலாற்றுத் தவறுகள் இழைக்கப்பட்டன. இந்தப் பின்புலத்தில் விடுதலை புலிகளின் போராட்டமோ ஒரு பெரும் பனைமரமாக வளர்ந்து இறுதியில் முறிந்துபோன கதையானது.

இந்த நிலையில் அன்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எடுத்த தீர்மானம் சரியானதொரு தீர்மானம் என்பதை காலம் நிரூபித்திருக்கிறது.

# குற்றவியல் நடவடிக்கை சட்டம் சான்றுரைப்படுத்தப்பட்டது!

கொழும்பு, ஜூன் 20

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலத்தில் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன நேற்று முன்தினம் கையொப்பமிட்டு சான்றுரைப்படுத்தினார்.

1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை சட்டத்தை திருத்துவதற்கான இச்சட்டமூலம் 2025.04.08ஆம் திகதி முதலாவது மதிப்பீட்டுக்காக பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் 2025.05.23 ஆம் திகதி இடம்பெற்றதுடன் 2025.06.04ஆம் திகதி மூன்றாவது மதிப்பீட்டையடுத்து இச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதற்கமைய இந்தச் சட்டமூலம் 2025ஆம் ஆண்டு 07ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமாக நடைமுறைக்கு வருகிறது.

2025ஆம் ஆண்டு 07ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டத்தின் மூலம் சந்தேக நபர்களும் பிரதிவாதிகளும் நீதிமன்றங்களில் நேரில் முற்படாமல் மெய்நிகர் வழியில் பங்கேற்க முடியும்.

நீதிவான்கள் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், பொது சுகாதார அவசர நிலைகள் அல்லது தனிமைப்படுத்தல் போன்ற சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட தனிநபர்கள் நேரில் முற்படுவதிலிருந்து விடுவிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில், சம்பந்தப்பட்ட நபர் சட்டத்தரணி ஒருவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், நேரடியாக காணொலி மூலம் இணைந்துகொள்ள முடியும்.

இந்தச் சட்டம் மூலம் சாட்சியாளர்களுக்கு எந்தவொரு இடத்திலிருந்தும் தொலைதூரத்திலிருந்து சாட்சியமளிப்பதற்கு இடமளிக்கிறது. எனினும், முதலாவது நீதிமன்ற வருகை, சித்திரவதை அல்லது மனித உரிமைகள் மீறல் தொடர்பான வாக்குமூலங்கள் அல்லது உளநலப் பிரச்னைகளுக்கு தனிநபர்கள் நேரில் முற்பட வேண்டும். இதில் ஆணையாளர்களை நியமித்தல், இனங்காண்பதை உறுதிப்படுத்தல் மற்றும் இலத்திரனியல் ஆவணங்கள் உள்ளிட்ட செலவுகளை கையாளுதல், தொலைதூர விசாரணைகளுக்கு நடவடிக்கை முறைகள் அறிமுகப்படுத்தப் பட் டுள்ளன.

இந்த சட்டமூலம் சட்டப் பாதுகாப்புகளைப் பேணும் அதேவேளை நீதித்துறை அமைப்பை டிஜிற்றல் மயமாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

(ஐ)


# துமிந்த திஸநாயக்கவின் விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு, ஜூன் 20

முன்னாள் அமைச்சர் துமிந்த திஸநாயக்கவை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிசை நீதிவான் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள துமிந்த திஸநாயக்க நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கொழும்பில் உள்ள சொகுசு தொடர்மாடி குடியிருப்பு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில்



இருந்த பெண்ணிடம் இருந்து தங்கமுலாம் பூசப்பட்ட ரி -56 ரக துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், முன்னாள் அமைச்சர் துமிந்த திஸநாயக்க கொழும்பு பம்பலப்பிட்டி பிரதேசத்தில் வைத்து கடந்த மே 23ஆம் திகதி கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த துமிந்த திஸநாயக்க, சுகயீனம் காரணமாக மே 25ஆம் திகதி சிறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் மே 28ஆம் திகதி மீண்டும் மகசின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பணிப்புறக்கணிப்பு ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, ஜூன் 20


புகையிரத கட்டுப்பாட்டாளர்களின் 48 மணி நேர பணிப்பகிஷ்கரிப்பு இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

இதனை, புகையிரத கட்டுப்பாட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் கே.டி. துமிந்த பிரசாத் தெரிவித்துள்ளார்.

பதவி உயர்வில் தாமதம் உட்பட பல பிரச்னைகளை முன்வைத்து நள்ளிரவு முதல் 48 மணி நேர பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே பணிப்புறக்கணிப்பு இரு வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

குடும்பத்தில் விட்டு கொடுத்து போவது நல்லது. வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனமுடன் செயல்பட வேண்டிய நாள்.

**இடபம்**

குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வீட்டை அழகுபடுத்துவீர்கள். சக ஊழியர்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள்.

**மிதுனம்**

எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். உடன் பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். தலைமையின் ஆதரவை பெறுவீர்கள். சிந்தனைத் திறன் பெருகும்.

**கடகம்**

கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**சிம்மம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது நடப்பது ஒன்றாகவும் இருக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.

**கன்னி**

பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். தன்னம்பிக்கை நாள்.

**துலாம்**

குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். மரியாதை கூடும். சாதிக்கும் நாள்.

**விருட்சிகம்**

புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உங்கள் திறமைகள் வெளிப்படும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**தனுசு**

திட்டமிட்ட வேலைகள் தடையின்றி முடியும். தாய் வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**மகரம்**

துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சொத்துப் பிரச்னைக்கு சுமுக தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. மேலதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்.

**கும்பம்**

குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வியாபாரத்தில் லாபம் கணிசமாக உயரும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**மீனம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அவசரப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப்போகும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

# பழைய பூங்காவில் 200 மரங்களை பராமரிக்கும் உத்தியோகத்தர்கள்

## பதில் அரச அதிபர் பிரதீபன் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நடப்பட்ட 200 மரங்களை ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் பொறுப்பேற்று சீராக நீர் ஊற்றி பராமரித்து வருகின்றனர் என்று மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இரண்டாவது காலாண்டுக்கான நிதி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் பதில் அரசாங்க அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதீபன், முதலாம் காலாண்டுக்கான நிதி முன்னேற்றத்தையும் இரண்டாவது காலாண்டுக்குரிய நிதி விடயங்கள் தொடர்பாகவும் ஆராய்வதுமே இந்தக் கூட்டத்தின் நோக்கமாகும் எனவும் தெரிவித்தார்.



மேலும் நிதி முகாமைத்துவம், கட்டுப்பாடுகள் உரியவகையில் பின்பற்றப்பட வேண்டும் என்பதனையும் ஆராய்வது அவசியமானது எனக் குறிப்பிட்ட பதில் அரசாங்க அதிபர், உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பான கடமைகள் மூலம் வேலைத் திட்டங்களுக்கான நிதி முன்னேற்றங்களை முழுமையாக இவ்வாண்டு இறுதிக்குள் பூர்த்தி செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். மேலும், பழைய பூங்காவில் சுற்றாடல் தினமான யூன் 05 இல் முதற் கட்டமாக 200 மரங்கள் நாட்டப்பட்டதனை குறிப்பிட்டு, ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் ஒவ்வொரு மரத்தை பொறுப்பேற்று சீராக நீர் ஊற்றிவருவதனையும், சில உத்தியோகத்தர்கள் தமது பிள்ளைகளுடன் விடுமுறை நாட்களில் வந்து நீர் ஊற்றிச் செல்வதனையும் அவதானித்த போது அவர்களின் சமூகப் பொறுப்பை உணரக்கூடியதாக இருப்பதாகவும் இதன் மூலம் தமது கடமைகளிலும் உத்தியோகத்தர்கள் வினைத்திறனாக செயல்படக்கூடியவர்கள் என்பது புலனாகுவதாகவும் பதில் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனன், பிரதம கணக்காளர் எஸ். கிருபாகரன், பிரதம பொறியியலாளர் க. திருக்குமார், உதவி மாவட்டச் செயலாளர் உ. தர்சினி, கணக்காளர் எஸ். நிர்மல் உள்ளிட்ட பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

(எ)





# வடக்கில் யாழ். மாவட்டம் இரண்டாமிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

மாற்றுத்திறன் நபர்களுக்கான தேசிய கலாசார போட்டியின் மாகாண மட்டப் போட்டி கடந்த 17 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலக திறன் விருத்தி பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம் மாவட்டம் இரண்டாம் இடத்தை தனதாக்கிக்கொண்டது.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நளாயினி இன்பராஜ் முன்னிலையில் இந்தப் போட்டி நிகழ்வு நடைபெற்றது.

(எ)

# மாவட்ட செயலக நலன்புரிக் கழக கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ். மாவட்ட செயலக நலன்புரிக் கழகத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் கழகத்தின் தலைவரும் உதவி மாவட்டச் செயலாளருமான உ. தர்சினி தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தப் பொதுக் கூட்டத்தில் பதில் அரசாங்க அதிபரும் கழகத்தின் போசகருமான ம. பிரதீபன் பங்குபற்றி நலன்புரிக் கழகத்தின் வளர்ச்சிக்கு பல்வேறு ஆலோசனைகளை முன்வைத்தார்.

இந்தக் கூட்டத்தில் ஆண்டுப் பொதுக்கூட்ட அறிக்கை, செயல்பாட்டு அறிக்கை மற்றும் கணக்கறிக்கை என்பன வாசிக்கப்பட்டு அங்கத்தவர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து புதிய நிர்வாக சபையானது தெரிவு செய்யப்பட்டது. இதன்படி, பிரதிப் புள்ளிவிவரத் திணைக்கள பணிப்பாளர் ம. வித்தியானந்தநேசன் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

(எ)

# யாழ். கோட்டையை பார்வையிட்டார் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்றூ

யாழ்ப்பாணம், ஜூன் 20

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்றூ பற்றிக் வடக்குக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இவ்வாரம் யாழில் தங்கியிருக்கும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்றூ பற்றிக், நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கோட்டையை பார்வையிட்டார்.

இதேவேளை, யாழ். மாநகர சபை முதல்வர், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், கல்வியாளர்கள், தொழில் முனைவோர், சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல தரப்பினரையும் அவர் சந்திக்கவுள்ளார்.

இந்தச் சந்திப்புகளின் போது நல்லிணக்கம், கல்வி, மேம்பாடு மற்றும் வாழ்வாதாரங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளன.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கு மோதலால் நாட்டுக்கு பாதிப்பு ஏற்படும்

## அரசு கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

கொழும்பு, ஜூன் 20

ஈரான்-இஸ்ரேல் மோதலானது கடுமையான மனிதாபிமானப் பிரச்னையை தோற்றுவித்துள்ளது. இந்த மோதலானது இந்த இரு நாடுகளினது மக்களை மட்டுமல்லாது, இந்நாட்டிலிருந்து இஸ்ரேலுக்குச் சென்று தொழிலாளர்களாக பணிபுரியும் சுமார் 20,000 பேரையும் பாதித்துள்ளது. இவ்வாறு அங்கிருக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பு தொடர்பான பிரச்னைகள் எழுந்துள்ளன. எனவே, இதற்கான முறையான திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டும். அவர்களின் உயிர், நலன்புரி மற்றும் பாதுகாப்பு என்பவற்றிற்காக அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஈரான்-இஸ்ரேல் மோதல் நமது நாட்டிற்கு ஏற்படுத்தும் தாக்கம் குறித்து இநேற்று பாராளுமன்ற சபை அமர்வின் போது கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டில், வெளிநாட்டு பணியாளர்களால் நமது நாடு 6.57 பில்லியன் டொலர்களை ஈட்டியது. 80 வீத தொழிலாளர்கள் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ளனர். அந்நிய செலவாணி அனுப்புவது 10 வீதம் குறைந்தால், டொலர் மில்லியன் 660 குறையும். மோதல் பரவினால், தொழில் இழப்பு ஏற்படும். இதனால் எமது நாட்டிற்கு கடும் பிரச்சினை ஏற்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக் காட்டினார்.

மேலும், மசகு எண்ணெய் விலைகள் 7 வீதம் அதிகரித்துள்ளன. ஒரு பீப்பாய் எண்ணெயின் விலை 75 டொலரை நெருங்கிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றன. இந்த 10 வீத டொலர் அதிகரிப்பால் எண்ணெய் விலையில் 400 முதல் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை நாம் மேலதிகமாக செலவிட வேண்டி வரும். வருடம் தோறும் 4.5 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள எண்ணெயை இறக்குமதி செய்து வருகிறோம். இது மொத்த இறக்குமதியில் 25 வீதம் ஆகும். எரிபொருள் விலை உயர்வு காரணமாக நமது நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்படும் பாதிப்பை முழுமையாக ஆராய்ந்து, பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய தீங்கு விளைவிக்கும் சூழ்நிலையைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (அ)

# சுற்றுலாத்துறையில் உள்ள ஓட்டோ சாரதிகளுக்கு விசேட வேலைத்திட்டம்

கொழும்பு, ஜூன் 20

சுற்றுலாத்துறையில் ஈடுபடும் முச்சக்கர வண்டி சாரதிகளின் மனப்பான்மை மற்றும் நெறிமுறைகளை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க "கிளீன் சிறீலங்கா" செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான பூர்வாங்க கலந்துரையாடல், நேற்று முன் தினம் முற்பகல் "கிளீன் சிறீலங்கா" செயலகத்தில் இடம்பெற்றது. அதன்படி, இந்த வருடத்தில் நாட்டின் 09 மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் பத்தாயிரம் வாடகை வாகனச் சாரதிகளுக்கு பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு 25 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு மாகாணத்திலும் 10 நிகழ்ச்சிகளை நடத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கு, முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு போக்குவரத்து விதிகள் பற்றிய விரிவான அறிவை வழங்குவதற்கும், முச்சக்கர வண்டி சாரதிகளிடம் பொறுப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், போக்குவரத்து சேவைகளை வழங்கும்போது பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தெளிவூட்டல், சுற்றுலா பயணிகளின் விருப்பங்களை நிறைவேற்றும் வகையில் சேவைகளை வழங்குதல், சுற்றுலா முச்சக்கரவண்டி சாரதிகளுக்கான மென்பொருள் செயலியொன்றை அறிமுகப்படுத்துவதுடன், அதன் ஊடாக சுற்றுலாத் துறை தொடர்பான சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இது தவிர, நட்புடனும் தரமான வகையிலும் வாடிக்கையாளர் சேவையைப் பேணுவதற்கு, முச்சக்கர வண்டி சாரதிகளிடம் சிறந்த மனப்பான்மை மேம்படுத்துதல், தனிப்பட்ட சுகாதாரம் மற்றும் நிபுணத்துவத்தை மேம்படுத்துதல், அவர்கள் சேவைகள் வழங்கும் பகுதிகள் மற்றும் இடங்கள் பற்றிய அறிவை மேம்படுத்துவதும் எதிர்பார்க்கப்படுகிறது.

அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் தொழிற்சங்கம், அனைத்து இணையவழி ரக்ஸி சேவை சாரதிகள் சங்கம், இலங்கை போக்குவரத்து செயலி பயன்பாட்டாளர்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

# அரசாங்க நியமனங்களை ஒரே நேரத்தில் வழங்குக!

## ஆசிரியர், அதிபர் தொழிற்சங்க கூட்டமைப்பினர் வலியுறுத்தல்

கொழும்பு, ஜூன் 20

வரையறுக்கப்பட்ட தேர்வு நியமனங்கள் மற்றும் திறந்த வகை நியமனங்கள் ஆகிய இரண்டையும் ஒரே நேரத்தில் வழங்க அரசாங்கம் நடவடிக்கை என ஆசிரியர் அதிபர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஆசிரியர் அதிபர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பு கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றிய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனை தெரிவித்தார்.

# 4 வயது மகளை கொடூரமாக தாக்கி காயப்படுத்திய கர்ப்பிணி கைது!

கொழும்பு, ஜூன் 20

4 வயது மகளை கொடூரமாக தாக்கி காயப்படுத்தியதாக கூறப்படும் கர்ப்பிணித் தாய் ஒருவர் ஜா எல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் கம்பஹாவில் உள்ள ஜா எல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் ஜா - எல பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபரான கர்ப்பிணித் தாய் கைதுசெய்யப்பட் டுள்ளார்.

ஜா - எல பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய கர்ப்பிணித் தாயொருவரே கைது செய்யப்பட்டுள்ளார். காயமடைந்த மகள் ராகமை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான கர்ப்பிணித் தாய், தனது கணவருடன் இணைந்து நீண்ட நாட்களாக தனது 4 வயது மகளை கொடூரமாக தாக்கி காயப்படுத்தி வந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# பிள்ளையானின் அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணை ஜூன் 23 ஆம் திகதி!

கொழும்பு, ஜூன் 20

தன்னை கைது செய்து பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களம் எடுத்த நடவடிக்கை ஊடாக தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்கக் கோரி முன்னாள் இராஜாங்க அமைச்சரான பிள்ளையான் என்கிற சிவநேசதுரை சந்திரகாந்தன் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமைமீறல் மனுவை எதிர்வரும் 23ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனு உயர்நீதிமன்ற நீதியரசர்களான எஸ். துரைராஜா, மேனகா விஜயசுந்தர மற்றும் சம்பத் விஜேரத்ன ஆகிய மூவர் அடங்கிய குழாம் முன்னிலையில் அழைக்கப்பட் டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்போது சட்ட மா அதிபர் சார்பில் மன்றில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுஹர்ஷி ஹேரத் மன்றில் விடயங்களை முன்வைத்து இந்த மனு தொடர்பான முதற்கட்ட ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய இரு வார கால அவகாசம் கோரினார்.

இதற்கமைய மனு தொடர்பிலான ஆட்சேபனைகளை முன்வைக்க பிரதிவாதி தரப்புக்கு அனுமதி வழங்கிய நீதியரசர்கள் குழாம் மேலும் இது தொடர்பில் மனுதாரர் சார்பில் ஆட்சேபனைகள் இருக்குமாயின் அவற்றையும் ஒரு வார காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்குமாறு உத்தரவு பிறப்பித்தது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட விசாரணை பிரிவு சிறப்புப் பொறுப்பதிகாரி மாதவ குணவர்தன, குற்றப் புலனாய்வுத் திணைக்கள பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் இமேஷா முத்துமால, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, பாதுகாப்பு அமைச்சர் அநுர குமார திஸாநாயக்க மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

கடந்த ஏப்ரல் 8ஆம் திகதி தனது கட்சியின் அமைப்பு நடவடிக்கைகளில் பங்கேற்றுக் கொண்டிருந்தபோது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தை சேர்ந்த அதிகாரிகள் குழு மட்டக்களப்புப் பகுதியில் வைத்து தன்னைக் கைது செய்ததாக மனுதாரர் கூறுகிறார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உப வேந்தர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டது தொடர்பாக தான் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறும் மனு தாரர், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தூங்குவ தற்குக் கூட தனக்கு போதுமான வசதிகள் இல்லை என்று கூறி யுள்ளார்.

எந்தவொரு நியாயமான காரணமும் இல்லாமல் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தன்னைக் கைது செய்து தடுத்து வைத்தது. தனது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகவும், தன்னைத் தடுத்து வைக்கப் பிறப்பிக்கப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவை செல்லாததாக்கும் தீர்ப்பை பிறப்பிக்கவேண்டும் என்றும் மனுதாரர் உயர் நீதிமன்றத்தை கோரினார்.

மேலும் தனது சட்டத்தரணிகளை அணுகுவதைத் தடுப்பதன் மூலம் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்க மாறும் தனது அடிப்படை உரிமைகளை மீறியதற்காக நூறு மில்லியன் ரூபா இழப்பீட்டை பெற்றுத் தருமாறும் பிள்ளையான் தனது சட்டத்தரணிகள் மூலம் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். (அ)

# இலங்கையில் ஸ்டார்லிங் இணைய சேவை விரைவில்!

கொழும்பு, ஜூன் 20

எலோன் மஸ்க்கின் செயற்கைக்கோள் இணையச் சேவையான ஸ்டார்லிங் விரைவில் இலங்கையில்சேவைகளைவழங்கவுள்ளது.

இந்தமாத இறுதியில் அந்த சேவை இலங்கையில் ஆரம் மாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் நாடு முழுவதும் பரீட்சார்த்த நடவடிக்கைகள் ஏற்கனவே நடந்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்டார்லிங்கின் வருகை, அதிவேக செயற்கைக்கோள் அடிப்படையிலான இணைப்பை வழங்குவதன் மூலம், இலங்கையின் தொலைதூர மற்றும் பின்



தங்கிய பகுதிகளில் இணைய அணுகல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# பிங்கிரிய பிரதேச சபையின் அதிகாரம் சஜித் வசமானது

கொழும்பு ஜூன் 20


குருநாகல் மாவட்டம் பிங்கிரிய பிரதேச சபையின் அதிகாரத்தையும் தவிசாளர் பதவியையும் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சி தம்வசப்படுத்தியது. பிங்கிரிய பிரதேச சபையின் தவிசாளரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது.

இதன்போது, பெரும்பான்மை ஆதரவை பெற்ற ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சி ஆட்சியைக் கைப்பற்றியதுடன் பிங்கிரிய பிரதேச சபையின் தவிசாளராக கமல் விஸ்வநாத் தெரிவு செய்யப்பட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆராய்ச்சி கப்பல் விடயத்தில்

# ஐ.நா.வின் கோரிக்கையை நிராகரித்த இலங்கை அரசு!



கொழுபு, ஜுன் 20

**இலங்கை கடல்களில் நீண்டகால உணவுப் பாதுகாப்பை மதிப்பிடும் தமது ஆராய்ச்சிக் கப்பலை ஜுலை 15 முதல் ஓகஸ்ட் 20 வரை தனது கடல் எல்லைக்குள் அனுமதிக்க வேண்டும் என்ற ஐக்கிய நாடுகள் சபையின் கோரிக்கையை இலங்கை நிராகரித்துள்ளது.**

வெளிநாட்டு ஆராய்ச்சிக் கப்பல்களுக்கான நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை இறுதி செய்வதில் ஏற்பட்ட தாமதமே இந்த மறுப்புக்குக் காரணம் என்று ஐ.நா. ஆவணம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு ஆராய்ச்சிக் கப்பல்களுக்கான நிலையான இயக்க நடைமுறைகளை உருவாக்கும் வரை, எவ். நன்சென் என்ற கப்பலின் வருகையை இரத்து செய்து இலங்கை மீன் வளம், நீர்வாழ் மற்றும் பெருங் கடல் வள அமைச்சகத்திடமிருந்து ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு 2025 மே 19 திகதி கடிதத்தைப் பெற்றது என்று அந்த ஆவணம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இது நேரடி நிதி இழப்புகளை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், பசுமை காலநிலை நிதியத்தால் நிதியளிக்கப்படும் வரவிருக்கும் காலநிலை தழுவல் திட்டங்களின் செயல்திறனைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும்.

மேலும், 2030 இற்குப் பிறகு எந்தவொரு எதிர்கால வருகையையும் தாமதப்படுத்தக்கூடும் என்று ஆவணம் கூறியது.

இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்ட ஐ.நா. ஆவணத்தின்படி, இது ஒரு முக்கிய பொருளாதாரத் துறையில் முடிவெடுப்பதற்கான முக்கிய தரவுகளை அரசாங்கத்திற்கு இழப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் முறையான கோரிக்கையின் அடிப்படையில், ஐ.நா.வின் கொடியின் கீழ் இயங்கும் கப்பலின் வருகை தொடர அனுமதிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் குடியுரிமை ஒருங்கிணைப்பாளர் அலுவலகம் கோரியுள்ளது.

அதன்படி, இலங்கை வெளியுறவு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சுக்கு அதன் மிக உயர்ந்த பரிசீலனையின் உத்தர வாதங்களை புதுப்பிக்க ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் அலுவலகம் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறது என்றும் ஆவணம் கூறியது.

கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் அலுவலகம், உணவு மற்றும் விவசாய அமைப்பு ஜுலை 15 முதல் ஆகஸ்ட் 20, 2025 வரை இலங்கைக்கு ஒரு அதிநவீன கப்பலான எவ். நன்சென் அனுப்பப்படுவதை ஒருங்கிணைத்துள்ளது என்றும் அது கூறியது. (அ)

# இரண்டு மில்லியன் ரூபாயை கப்பமாக பெற்ற இருவர் கைது

கொழும்பு, ஜுன் 20

நீர்கொழும்பு - படல்கம - மெல்லவகெதர பகுதியைச் சேர்ந்த ஒருவரையும் அவரது குழந்தையையும் கொலை செய்வதாக மிரட்டி, 2 மில்லியன் ரூபாயை கப்பமாக பெற்ற இரு சந்தேக நபர்கள் நீர்கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபரிடம் ஒரு கோடி ரூபாய் கப்பம் கோரி கடந்த 9 ஆம் திகதி மிரட்டியுள்ளனர்.


அதில் 2 மில்லியன் ரூபாயை வழங்கிய நிலையில் மிகுதி பணத்தை செலுத்தாவிடின் தந்தையையும், குழந்தையையும் கொலை செய்வதாக மிரட்டிய சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவு விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

அதனடிப்படையில் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின்படி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இரு சந்தேகநபர்களை கைது செய்து படல்கம பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்த நடவடிக்கைக்காக ஒருங்கிணைந்த குற்றச்செயல் குற்றவாளிகள் இருவரின் பெயரைப் பயன்படுத்தியுள்ள போதிலும் அவர்களுக்கு இதில் தொடர்பு இல்லை என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும் குறித்த நபரை மிரட்டுவதற்காகவே அவர்களின் பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. இந்தக் குற்றச்செயலுக்காகப் பயன்படுத்தப்பட்ட விளையாட்டு துப்பாக்கி, உந்துருளி, கப்பம் பெற்ற பணத்தில் கொள்வனவு செய்யப்பட்ட உந்துருளி, முச் சக்கரவண்டி ஆகியவற்றை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். (அ)

# மேல்முறையீட்டு நீதிமன்றுக்கு புதிய தலைவராக அபேசூரிய!



கொழும்பு, ஜுன் 20

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் புதிய தலைவராக சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி நளின் ரொஹாந்த அபேசூரிய நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இதேவேளை, மேல் நீதிமன்ற நீதிபதி தொன் பிரான்சிஸ் ஹத்துருசிங்க குணவர்தன மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய காந்த மத்தும படபெந்திகே ஆகியோர் புதிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இந் நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்துகொண்டார். (அ)

# 16 மாவட்டங்களில் டெங்கு ஒழிப்பு வாரம்

கொழும்பு, ஜுன் 20

எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் ஜுலை 5 ஆம் திகதி வரை 16 மாவட்டங்களில் டெங்கு ஒழிப்பு வாரம் நடைமுறைப்படுத்தப்படும் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை காரணமாக நுளம்புகளின் பரவல் அதிகரித்துள்ளதால், அதைக் கட்டுப்படுத்த இந்த டெங்கு ஒழிப்பு வாரத்தை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் ஆலோ சகரும், சமூக வைத்திய நிபுணருமான பிரஷிலா சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய சமூக வைத்திய நிபுணர் பிரஷீலா சமரவீர இதனைத் தெரிவித்தார்.

நாடு முழுவதும் இதுவரை 26,000 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப் பிட்டார்.

இதுவரை ஒரு குழந்தை மரணம் பதிவாகியுள்ளது, மேலும் 45 வீதமான நோயாளிகள் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் சமூக வைத்திய நிபுணருமான பிரஷிலா சமரவீர தெரிவித்தார்.

இதேவேளை, நாடு முழுவதும் 26,775 டெங்கு நோயாளர்கள் மற்றும் 14 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன. மேல், கிழக்கு, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஆறு பேர் கைது!

கொழும்பு, ஜுன் 20

12.6 மில்லியன் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டுத் தயாரிப்பு சிகரெட்டுகளை கடத்த முயன்ற ஆறு பயணிகள் நேற்றுக் காலை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதி காரிகளால் கைது செய்யப்பட்டனர்.

விமான நிலையத்தின் கிரீன் வழித்தடம் வழியாக கடத்தல் பொருட்களை எடுத்துச் செல்ல முயன்றபோது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

நான்கு ஆண்களும், இரு பெண்களும் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

அவர்களில் ஒரு பெண் வெளிநாட்டுப் பிரஜை ஆவார்.

சுங்கத்துறை தகவலின்படி, பயணிகள் துபாய், ஷார்ஜா மற்றும் பேங்கொக்கில் இருந்து வந்தவர்கள்.

அவர்கள் தங்கள் பொருட்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 84,000 வெளிநாட்டுத் தயாரிப்பு சிகரெட்டுகள் அடங்கிய 420 அட்டைப்பெட்டிகளை எடுத்துச் செல்ல முற்பட்ட போது கைது செய்யப்பட்டனர்.

விமான நிலைய சுங்க அதிகாரிகள், சுங்க போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளுடன் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

சந்தேக நபர்கள் தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ள மேலும் விசாரணைகள் நடை பெற்று வருகின்றன. (அ)

# ஜனவரி முதல் 73,000இற்கும் மேற்பட்ட வாகனங்கள் பதிவு

கொழும்பு, ஜுன் 20

வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த ஆண்டு ஜனவரி முதல் 73,400 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மோட் டார் போக்குவரத்துத் திணைக் களம் தெரிவித்துள்ளது.

இந்த வாகனங்களில் அதிக எண்ணிக்கையிலானவை மோட்டார் சைக்கிள்கள். அவற்றின் எண்ணிக்கை 58,947 என மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையர் ஜெனரல் கமல் அமரசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு மேலதிகமாக, 7,500 கார்கள் மற்றும் 1,666 முச்சக்கர வண்டிகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. கடந்த மாதத்தில் அதிக எண்ணிக்கையிலான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# ஈரானின் ஏவுகணைத் தாக்குதலில் இலங்கைப் பராமரிப்பாளர் காயம்!

கொழும்பு, ஜுன் 20

இஸ்ரேலில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு அருகில் ஈரானிய ஏவுகணைத் தாக்குதலைத் தொடர்ந்து இலங்கைப் பெண் பராமரிப்பாளர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

டெல் அவிவில் உள்ள பீர்ஷெபா மருத்துவமனையில் தனது நோயாளிக்கு சிகிச்சை அளித்துக் கொண்டிருந்த போது, மருத்துவமனைக்கு அருகில் ஏவுகணைத் தாக்குதலின்போது பராமரிப்பாளர் காயமடைந்ததாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் தற்போது சிகிச்சை பெற்று வருவதாகவும், இந்த விடயத்தில் உதவ தூதரகத்திலிருந்து ஒரு குழு அனுப்பப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (அ)

# 19 மூடைகளில் கொண்டு வரப்பட்ட 570 கிலோ கிராம் இஞ்சி சிக்கியது

கொழும்பு, ஜுன் 20

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட ஒரு தொகை காய்ந்த இஞ்சி கற்பிட்டி-பங்களாவாடிய கடற்பரப்பில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. கற்பிட்டி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற விசாரணைகளுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது, குறித்த காய்ந்த இஞ்சி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, 19 மூடைகளில் இருந்து 570 கிலோ கிராம் காய்ந்த இஞ்சி மீட்கப்பட்டுள்ளது. இவை படகொன்றின் ஊடாக கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், படகில் இருந்தவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ள கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் மத்தியில் புகைபிடித்தல் மதுபானம் அருந்துதல் அதிகரிப்பு!

## போதைப்பொருள் தகவல் மையம்

கொழும்பு, ஜூன் 20

**இலங்கையில் 15 முதல் 21 வயதுக்குட்பட்ட இளைஞர்களில் 11.6 வீதமானோர் புகைபிடிப்பதாகவும், 18 வீதமானோர் மதுபானம் அருந்துவதாகவும் மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் மேற்கொண்ட ஆய்வில் வெளிக்கொணரப்பட்டுள்ளது.**

11 மாவட்டங்களை உள்ளடக்கி மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளது.

இந்த ஆய்வு குறித்து மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்ததாவது-புகை மற்றும் மதுவை முதன்முறையாக பயன்படுத்தத் தொடங்கும் பெரும்பாலான சந்தர்ப்பங்கள் சமூக நிகழ்வுகளில் இடம்பெறுகின்றன. இதே போன்ற ஆய்வுகளில், நண்பர்கள் மற்றும் சமூகவட்டத்தின் அழுத்தமும் தூண்டுதலும் இந்த நடத்தை உருவாகும் முக்கியக் காரணிகளாக காணப்படுகின்றன. ஊடகம் மற்றும் பிற தளங்கள் வழியாக புகையிலை நிறுவனங்கள் மேற்கொள்ளும் பல்வேறு விளம்பரங்கள், பாதிக்கப்படக்கூடிய குழுக்களில் இவர்களது தயாரிப்புகளுக்கு நேர்மறையான பார்வையை உருவாக்கும் முக்கிய பங்காற்றுகின்றன-என்று கூறியுள்ளது.

எனினும், கடந்த ஒரு தசாப்தத்தில் மதுபானப் பயன்பாடு குறைந்திருப்பதாகவும், 2022 இற்குப் பின்னர் மொத்த மதுவின் உற்பத்தி குறைந்திருப்பதையும் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. அதேவேளை, அரசாங்கத்தின் வரிசை விகித உயர்வுகள் காரணமாக ஊழியர் வரி வருமானம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் முடிவுகளில், 36.5 வீதம் பேர் புகைபிடிப்பதை நிறுத்தியும், 20.9 வீதம் பேர் அதைப் பற்றிய பழக்கத்தை குறைத்தும், 27.9 வீதம் பேர் மதுபானம் அருந்துவதை முழுமையாக கைவிட்டும் உள்ளனர்.

மத்திய வங்கியின் புள்ளிவிவரங்களின்படி, 2023 ஆம் ஆண்டு சிகரெட் வரி 20 வீதம் உயர்த்தப்பட்டதன் விளைவாக அரசுக்கு ரூ.7.7 பில்லியன் வருமானம் அதிகரித்துள்ளது. (அ)

# இஸ்ரேலிலுள்ள இலங்கையர்களை எந்நேரத்திலும் அழைத்து வர தயார்!

## அரசாங்கம் நேற்று அறிவிப்பு




கொழும்பு, ஜூன் 20

போர் சூழ்நிலை காரணமாக விசேட தேவை ஏற்பட்டால், இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலில் உள்ள அனைத்து விமான நிலையங்களும் மூடப்பட்டுள்ளதாகவும், எல்லையோர நாடுகள் வழியாக இலங்கையர்களை மீண்டும் அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

சமூக ஜனநாயகக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது அமைச்சர் இவ்வாறு கூறினார். (அ)

# சப்ரகமுவ, மேல் மாகாணங்களில் மழை; கடல் பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பு

கொழும்பு, ஜூன் 20

சப்ரகமுவ, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் ஊவா மாகாணத்தின் சில இடங்களிலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் சில இடங்களிலும் பிற்பகல் அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மலைப் பிராந்தியங்களின் மேற்கு சரிவுகளிலும், வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் அத்துடன் திருகோணமலை மாவட்டத்திலும் மணித்தியாலத்திற்கு சுமார் 30 முதல் 40 கிலோமீற்றர் வேகத்தில் அடிக்கடி ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

புத்தளம் தொடக்கம் கொழும்பு, காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை பெய்யக்கூடும்.

நாட்டை சூழ உள்ள கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 30 முதல் 40 கிலோமீற்றர் வேகத்தில் தென் மேற்குத் திசையில் இருந்து காற்று வீசும்.

புத்தளம் தொடக்கம் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான மாத்தறை தொடக்கம் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 50 முதல் 55 கிலோமீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் கொந்தளிப்பாகக் காணப்படும்.

காங்கேசன்துறை தொடக்கம் முல்லைத்தீவு ஊடாக திருகோணமலை வரையான அத்துடன் புத்தளம் தொடக்கம் கொழும்பு, காலி ஊடாக மாத்தறை வரையான கடல் பிராந்தியங்கள் இடைக்கிடையே ஓரளவு கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# 53 நாடுகளில் வழங்கப்படும் விவாக ரத்து தீர்ப்புகள் இலங்கையில் செல்லுபடியாகும்

## நீதி அமைச்சர் சபையில் தகவல்



கொழும்பு, ஜூன் 20

வெளிநாடுகளில் வழங்கப்படும் விவாகரத்து தீர்ப்புகள் மற்றும் கடன் வழங்கல் மற்றும் பெறுதல் பிணக்கு தொடர்பான தீர்ப்புகளை இலங்கையில் அங்கீகரிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இச்சட்டத்தில் 53 நாடுகளில் வழங்கப்படும் தீர்ப்புகள் இலங்கையில் செல்லுபடியாகும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வெளிநாட்டு தீர்ப்புக்களை பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல், பதிவு செய்தல் மற்றும் வலுவுறுத்தல் சட்டத்தின் கீழான கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-வெளிநாட்டுத் தீர்ப்புக்களை பரஸ்பரமாக ஏற்றுக்கொள்ளுதல், பதிவு செய்தல் மற்றும் வலுவுறுத்தல் தொடர்பான சட்டம் இதுவரை காலமும் இருக்கவில்லை. இவ்வாறான நிலையில் 2024 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க வெளிநாட்டு தீர்ப்புக்களை பரஸ்பரம் அங்கீகரித்தல், பதிவு செய்தல் மற்றும் வலுவுறுத்தல் தொடர்பான சட்டம் இயற்றப்பட்டது. இருப்பினும் இந்த சட்டம் முறையாக செயற்படுத்துவதற்குரிய கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவில்லை.


எந்தெந்த நாடுகளில், வழங்கப்படும் தீர்ப்புகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு புதிய கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் தற்போது ஆக்கப்பட்டுள்ளன. வெளிநாடுகளில் கடன் வழங்குநர் மற்றும் கடன் பெறுநருக்கு இடையிலான பிணக்குகளை தீர்ப்பதற்கான ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

வெளிநாடுகளில் வழங்கப்படும் விவாகரத்து தொடர்பான தீர்ப்பினை இந்த நாட்டில் அமுல்படுத்துவதற்கும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. நிபந்தனைகளின் அடிப்படையில் இதன் செல்லுபடித்தன்மை ஏற்றுக் கொள்ளப்படும்.

வெளிநாடுகளில் வழங்கப்படும் குற்றவியல் தொடர்பான தீர்ப்புகள் மற்றும் தண்டனைகள் இந்த சட்டத்துக்கு செல்லுபடியாகாது, வெளிநாடுகளில் வழங்கப்படும் விவாகரத்து தொடர்பான தீர்ப்புகள் மற்றும் கடன் வழங்கல் மற்றும் பெறுதல் தொடர்பான முரண்பாடுகளுக்கான தீர்ப்புகள் மாத்திரமே இந்த சட்டத்துக்கு ஏற்புடையதாக அமையும். இந்த சட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நாடுகளின் பெயர்களை உள்ளடக்கிய வகையில் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்படவில்லை.

எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தத்துவங்களுக்கு அமைவாக நான் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டேன். அதற்கமைவாக இந்த சட்டத்துக்குரிய ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளை உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். 53 நாடுகளை உள்ளடக்கியதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த சட்டத்துக்கு அமைய நாடுகளுக்கு இடையிலான தூதரகங்களின் செயற்பாடுகள் வினைத்திறனாக்கப்படும்-என்றார்.

புங்குடுதீவு கண்ணகை அம்மன் என வழங்கும்

ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இடம் பெறுகின்ற தவறுகளுக்கு எதிரான

மாபெரும் மக்கள் எழுச்சிப் போராட்டம்!

• காலம் : 21- 06- 2025 • நேரம் : காலை 10 மணி முதல் • இடம் : ஆலய முன்றலில்

எமது அன்புக்குரிய தீவுப்பகுதி மக்களே!

சமூகத்தில் பெருமதிப்புக்குரிய ஆன்றோர்களும், சான்றோர்களும் அங்கம் வகித்த ஆலய நிர்வாக சபையானது தற்போதைய காலகட்டங்களில் பொறுப்பற்ற நபர்களால் நிர்வகிக்கப்பட்டு எமது ஆலயத்தினதும் எமது புங்குடுதீவு மக்களினதும் கீர்த்திக்கும், புகழுக்கும் பங்கம் விளைவிக்கப்படுகிறது.

மேற்படி நிர்வாக சபை தலைமையின் தவறான செயல்களான: -

- ஆலய புனித தன்மையை பேணாமல் நடத்தல்.
- ஆலய பக்தர்களை சமமாக மதிக்காமல் நடத்தல்.
- ஆலய அயலில் வசிக்கும் மக்களுக்கு அன்னதான உணவை கொடுக்க மறுத்தல்.
- ஆன்மா லயப்படும்( அமைதி ) ஆலயத்தை வியாபார நிலையமாக மாற்றியமை.
- மாதாந்தம் அளவுக்கு அதிகமாக வீண் செலவுகளை செய்தல்.
- ஆலய திருட்டு சம்பவங்களை மூடி மறைத்தல் மற்றும் உடந்தையாக இருத்தல்.
- தங்களுக்கு சார்பாக முக்கியமான இடங்களில் கண் காணிப்பு கேமராக்களை பொருத்தாமல் தவிர்த்தல்.
- பிரதான திருவிழாக்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு கோராமல் திருட்டு சம்பவங்களுக்கு இடமளித்தல்.
- ஆலய திருவிழாக்களுக்கு அதிகமாக ,முறைகேடாக பணம் வசூலித்தல்.
- மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல் தவிர்த்தல்.
- பொறுப்பு வாய்ந்த அரசாங்க அதிகாரிகளின் அழைப்புக்களை உதாசீனம் செய்தல்.
- பொதுமக்களின் பணத்தை பெற்று பல வருடங்களாக கணக்கு காட்டாமல் தவிர்த்தல்.
- ஆலய யாப்பை மீறி ஒரு குடும்பத்தில் இருவர் பதவி வகித்தல். புங்குடுதீவில் நடாத்தவேண்டிய கூட்டங்களை ஆலய யாப்பினை மீறி தமக்கு சாதகமாக கொழும்பில் நடாத்துதல்.
- பொதுக் கூட்டத்தை நடாத்தாமல் தவிர்த்தல்.
- தவறுகளை சுட்டிக்காட்டி நீதி கோரிய ஏனைய அங்கத்தவர்கள் மீது வழக்கு பதிவு செய்து பிரசித்தி பெற்ற எமது ஆலயத்திற்கு அவதூறு ஏற்படுத்தியமை.

ஆகிய மேற்படி தவறான நடவடிக்கைகளுக்கு எதிராக தீவுப்பகுதி மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றாக அணிதிரண்டு எமது எதிர்ப்பை தெரிவிப்போம். அன்னை கண்ணகியின் ஆலயத்தில் ஒன்று கூடுவதால் நாம் அனைவரும் எமது தமிழ் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையிலான ஆடைகளை அணிந்து அமைதியாக போராடுவோம்.

இவ்வண்ணம்
கண்ணகை அம்மன் அடியார்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண பாலர் பாடசாலை பணியகத்தில் அரசியல்வாதிகள்!

## உடன் நீக்குமாறு ஆளுநரிடம் கோரிக்கை

திருகோணமலை, ஜூன் 20

**கிழக்கு மாகாண பாலர் பாடசாலை பணியகத்தின் முகாமைத்துவத்திலுள்ள அரசியல்வாதிகளை நீக்கி கல்வி சார்ந்த அதிகாரிகளை நியமிக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநரிடம் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் நேற்று ஆளுநருக்கு அவர் அனுப்பிய கடிதம் வருமாறு,

கிழக்கு மாகாண பாலர் பாடசாலை சட்டத்தின்படி இப்பணியகத்துக்கு முகாமைத்துவக்குழு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். மாகாண அமைச்சர் இல்லாத காரணத்தால் ஆளுநரால் இந்த முகாமைத்துவ குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றார்கள்.

பாலர் பாடசாலை பணியகத்தின் அம்பாறை மாவட்ட செயலாற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டவர் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றிபெற்று இப்போது பிரதேச சபையொன்றின் தவிசாளராக நியமனம் பெற்றுள்ளதாக தெரிய வருகின்றது. கல்வி நிர்வாகத்தில் நேரடி அரசியல் தொடர்பு உள்ளவர்கள் இருப்பது பொருத்தமானதல்ல என்பதை தாங்களும் ஏற்றுக் கொள்வீர்கள்.

அதேபோல கல்வித்துறை தொடர்பில்லாதவர்கள் இப்பணியகத்தின் முக்கிய பொறுப்புகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளதால் அவர்களால் சரியான நிர்வாக நடவடிக்கைகள் முன்னெடுக்க முடியாதுள்ளதாக எனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால், பாலர் பாடசாலை ஆசிரியைகளும், உத்தியோகத்தர்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கிழக்கு மாகாணப் பாலர் பாடசாலைகள் தான் மாகாணத்தின் எதிர்காலக் கல்வியை நிர்ணயிப்பவை.

எனவே, கிழக்கு மாகாணப் பாலர் பாடசாலை மாணவர்களின் உயரிய நலனைக் கருத்தில் கொண்டு பாலர் பாடசாலை பணியக முகாமைத்துவக் குழுவை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)



# நில அளவை திணைக்களத்தின் புதிய கட்டடம் திறந்து வைப்பு

சம்மாந்துறை, ஜூன் 20

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை நில அளவை திணைக்களத்துக்கான புதிய கட்டடம் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று சம்மாந்துறை பிரதேச நில அளவை அத்தியட்சகர் எம். நஜாகத் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல். முஹம்மது ஹனிபா, புதிய கட்டடத்தை நாடா வெட்டி திறந்து வைத்தார். (எ-01)

# முதலைகள் பெருக்கத்தால் மீனவர் உயிருக்கு ஆபத்து!



மட்டக்களப்பு, ஜூன் 20

மட்டக்களப்பு வாவியில் நீர்த்தாவரங்கள் அதிகமாக வளர்ந்து காணப்படுவதால் முதலைகள் பெருகிவிட்டதாகவும் இதனால், மீனவர்களின் உயிருக்கு ஆபத்து எனவும் இந்த சூழ்நிலையில் முதலையால் இழுத்துச் செல்லப்பட்டு ஒருவர் உயிரிழந்ததாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

இலங்கையின் இரண்டாவது மிகப் பெரிய வாவியான மட்டக்களப்பு வாவியில் பெருகிவரும் ஆற்றுவாழை எனப்படும் நீர்த்தாவரங்களால் முதலைகள் பெருக்கமடைந்துள்ளன.

அத்துடன் வாவி அழிவடைந்து வருவதாலும் மீனவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த வாவியில் சுமார் 15 ஆயிரம் மீனவ குடும்பங்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த வாவியில் ஆற்றுவாழைத் தாவரம் அதிகமாக வளர்ந்துள்ளதால் மீனவர்கள் தோணிகளை செலுத்த முடியாமல் அவதியுறுவதாக கூறினர்.

மேலும் இந்த வாவியில் முதலை, பாம்பு போன்ற உயிரினங்கள் அதிகளவில் உள்ளதாகவும் அண்மையில் ஆற்றுவாழைகளுக்குள் ஒளிந்திருந்த முதலையொன்று மீனவர் ஒருவரை இழுத்துச் சென்று கொன்றதுடன், பல கால்நடைகள் காணாமல் போயுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

எனவே, ஆற்றுவாழைகளை அகற்றுமாறு மீனவர்கள் உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# புத்தர் சிலை விவகாரத்தால் கைதான இளைஞனுக்கு பிணை வழங்கப்பட்டது

திருகோணமலை, ஜூன் 20

திருகோணமலை - மூதூர் 3ஆம் கட்டை மலையில் புத்தர் சிலை விவகாரத்தால் கைதான இளைஞனுக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை பிணை வழங்கப்பட்டது.

மூதூர் 3ஆம் கட்டை மலையில் விகாராதிபதியால் அ. ரமேஷ் என்பவருக்கு எதிராக மூதூர் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் மூதூர் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இதன்போது சந்தேக நபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி துஷ்யந்தன் குறித்த காணிக்கு அரசினால் வழங்கப்பட்ட ஒப்பம் இருக்கிறது.

வலுக்கட்டாயமாக 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆயுதப் படையினர் முகாம் அமைத்து அதில் சிறிய புத்தர் சிலை வைத்து வழிபட்டனர். பின்னர் அவர்கள் அங்கிருந்து 2020 இல் வெளியேறும் போது பிறகு வந்து அச்சிலையை எடுத்து செல்வதாக கூறிச் சென்றனர்.

ஆனால், இன்று வரை புத்தர் சிலை எடுக்கப்படாததால் அந்த இடத்தில் புத்தர் சிலையுடன் பிள்ளையார் சிலை வைத்து கடந்த 4 வருடங்களாக வழிபாடு செய்தார். கடந்த பௌர்ணமி தினத்தன்று விகாராதிபதி வந்து பிள்ளையார் சிலையை அகற்ற முயன்றார். அதனை காணி உரிமையாளர் எதிர்த்ததால் அவரைக் கைது செய்யுமாறு பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

இது மத சுதந்திரத்தை மீறும் செயல். இன முறுகலை ஏற்படுத்தும் செயல். எனவே, அவரை விடுவிக்குமாறு மன்றைக் கோரினார்.

இதனையடுத்து சந்தேக நபருக்கு நீதிவான் பிணை வழங்கி, இன முறுகலை ஏற்படுத்தும் செயல்பாடுகளை ஊக்குவிக்க வேண்டாம் என்று பொலிஸாருக்கு அறிவுறுத்தினார். (எ)

# வீதி புனரமைப்பு ஆரம்பம்

ஒலுவில், ஜூன் 20

அம்பாறை மாவட்டம், ஒலுவில் 6 ஆம் பிரிவில் வாழும் மீனவர்கள், பொதுமக்களின் போக்குவரத்து மற்றும் வாழ்வாதார அபிவிருத்திக்கு இன்றியமையாத வீதியாகவுள்ள வெளிச்ச வீட்டு கடற்கரை - கரையோர வீதிக்கு கிரவல் இட்டு புனரமைக்கும் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் அஹமட் அப்கர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார். (எ)

# காட்டுப் பாதை இன்று திறப்பு

## யாத்திரிகர்களுக்கு குடிநீர் வழங்க தொண்டு நிறுவனங்கள் விரைவு



காரைதீவு, ஜூன் 20

இன்று வெள்ளிக்கிழமை காலை திறக்கப்படும் கதிர்காமத்துக்கான காட்டுப் பாதையில் செல்லும் பாதயாத்திரிகர்களுக்கு குடிநீர் வழங்க தொண்டு நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

2025ஆம் ஆண்டுக்கான கதிர்காமம் பாதயாத்திரை குடிநீர் சேவைக்காக சிவ தொண்டன் அமைப்பு, சேவற்கொடியோன் அமைப்பு, வலம்புரியோன் அமைப்பு என்று பல தொண்டு நிறுவனங்கள் நேற்று நீர்த்தாங்கி கொண்ட உழவியந்திரங்கள் சகிதம் உகந்தமலையை சென்றடைந்தன.

இன்று முதல் காட்டுப் பாதையில் அவர்களது குடிநீர் வழங்கும் சேவை ஆரம்பமாகிறது. (எ-08)

# நிலாவெளியில் கோர விபத்து கணவன் பலி, மனைவி காயம்

திருகோணமலை, ஜூன் 20

நிலாவெளி பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்ற விபத்தில் கணவன் உயிரிழந்ததுடன் மனைவி படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

திரியாயிலிருந்து திருகோணமலை நோக்கி மூன்று பேருடன் பயணித்த ஓட்டோ நிலாவெளியில் வைத்து விபத்துக்குள்ளானதில் திரியாய் கிராமத்தைச் சேர்ந்த 72 வயது முதியவர் உயிரிழந்தார்.

அவரது மனைவி படுகாயங்களுக்குள்ளான நிலையில் திருகோணமலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலைக்கு மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்வதற்காக சென்றவர்கள் பயணித்த ஓட்டோ, வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் மோதி கவிழ்ந்ததாகவும் பின்னர் அவ்வீதியின் ஊடாக எதிர்த்திசையில் வந்த காரில் மோதி விபத்துக்குள்ளானதாகவும் தெரிய வருகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஓட்டோவை செலுத்திய நபர் பொலிஸ் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் மீது ஹைபர்சொனிக் ஏவுகணைகளை வீசியது ஈரான்

தெஹ்ரான், ஜூன் 20

**இஸ்ரேல் மீது 'பதா 1'என்ற ஹைபர்சொனிக் ஏவுகணைகளை வீசி ஈரான் தாக்குதல் நடத்தியது.**

அணு ஆயுத தயாரிப்பை ஈரான் தீவிரப்படுத்துவதாக கூறி, அந்த நாடு மீது இஸ்ரேல் கடந்த 13ஆம் திகதி தாக்குதல் நடத்தியது. இதனால், ஈரானும் பதிலடி தாக்குதலில் இறங்கியது.

இதில், ஈரானின் இராணுவத் தளபதிகள், அணு விஞ்ஞானிகள் உட்பட 200இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 2,000இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இஸ்ரேலிலும் உயிரிழப்பு எண்ணிக்கை 25-ஐ தாண்டிவிட்டது, 600இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இந்த நிலையில், இருதரப்பினர் இடையே ஏற்பட்டுள்ள போர் நேற்று 7ஆவது நாளாக தொடர்ந்தது. இதில், "பதா 1" என்ற சுப்பர்சொனிக் ஏவுகணைகளை ஈரான், இஸ்ரேல் மீது வீசியது. ஈரான் இந்த வகை ஏவுகணையை இஸ்ரேல் மீது வீசுவது இது முதல் முறை அல்ல. கடந்தாண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி இஸ்ரேலை 'பதா 1' ஏவுகணை மூலம் ஈரான் தாக்கியது.

இந்த சுப்பர்சொனிக் ஏவுகணை ஒலியைவிட 5 மடங்கு வேகத்தில் சென்று தாக்கும். மணிக்கு 17, 900 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லும் இந்த ஏவுகணையை நடுவானில் இடைமறித்து அழிப்பது சிரமம். 'பதா 1' ஏவுகணையை ஈரான் கடந்த 2023ஆம் ஆண்டு அறிமுகம் செய்தது.


இதற்கு 'பதா 1' என ஈரான் மதத் தலைவர் ஐயத்துல்லா அலி கமெனி பெயர் வைத்தார். 12 மீற்றர் நீளமுள்ள இந்த ஏவுகணை 1,400 கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்கும். திட எரிபொருளில் இயங்கும் இந்த ஏவுகணை 200 கிலோ வெடிகுண்டை எடுத்துச் சென்று தாக்கும்.

போரை நிறுத்திக் கொள்ள இஸ்ரேல் - ஈரான் ஆகிய நாடுகளுக்கு உலக நாடுகள் வேண்டுகோள் விடுத்தும் இரு நாடுகளும் தொடர்ந்து மோதிக் கொள்கின்றன. இதனால், இரு தரப்பிலும் குடியிருப்பு பகுதிகள் பலத்த சேதமடைந்துள்ளன.

ஈரான் மதத் தலைவர் ஐயத்துல்லா அலி கமெனி எக்ஸ் தளத்தில் விடுத்துள்ள செய்தியில், "கடவுளின் பெயரில் போர் தொடங்கியுள்ளது. இஸ்ரேலுக்கு வலுவான பதிலடி கொடுக்க வேண்டும். இஸ்ரேலியர்களுக்கு இரக்கம் காட்ட மாட்டோம்" எனக் கூறியுள்ளார். இதனால், இரு நாடுகள் இடையேயான போர் மேலும் தீவிரமடையும் சூழல் ஏற்பட்டுள்ளது. (எ)

# உலகில் எந்தவொரு பிரச்சனைக்கும் போர்க்களத்தில் தீர்வுகாண முடியாது

## இந்தியப் பிரதமர் மோடி தெரிவிப்பு



சாக்ரெப், ஜூன் 20

உலகில் எந்தவொரு பிரச்னைக்கும் போர்க்களத்தின் மூலம் தீர்வுகாண முடியாது என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

பாதுகாப்பு ஒத்துழைப்பு திட்டத்தை வகுக்க, இந்தியாவும் குரோஷியாவும் இருதரப்பு உறவுகளை விரைவுபடுத்தும் என்று மோடி கூறினார்.

கனடா பயணத்தை நிறைவு செய்த பிரதமர் மோடி நேற்று முன்தினம் அங்கிருந்து குரோஷியா சென்றார்.

இந்த நிலையில், குரோஷியா பிரதமர் ஆண்ட்ரேஜ் பிளென் கோவிச்சுடன் இணைந்து ஒரு கூட்டு செய்திக்குறிப்பில், இரு நாடுகளும் தங்கள் கல்வி நிறுவனங்களுக்கு இடையே கூட்டு ஆராய்ச்சி மற்றும் ஒத்துழைப்பை வலியுறுத்தியுள்ளதாகவும், இந்தியா குரோஷியாவுடன் அதன் விண்வெளி அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளும் என்றும் பிரதமர் மோடி கூறினார்.

மேலும், ஐரோப்பாவாக இருந்தாலும் சரி, ஆசியாவாக இருந்தாலும் சரி, பிரச்னைகளை போர்க்களம் மூலம் தீர்க்க முடியாது. எந்தவொரு நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்கும் மரியாதை அவசியம்- என்றார். (எ)



# ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல்: இதுவரை 585 பேர் உயிரிழப்பு

தெஹ்ரான், ஜூன் 20

ஈரான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இதுவரை 585 பேர் உயிரிழந்தனர்.

இஸ்ரேல் - ஈரான் இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவி வருகிறது. இதனிடையே, கடந்த 13ஆம் திகதி அதிகாலை ஈரானிலுள்ள அணு ஆராய்ச்சி மையங்கள், ஏவுகணை சேமிப்பு கிடங்குகள், கச்சா எண்ணெய் சேமிப்பு கிடங்குகள் உட்பட பல்வேறு இடங்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது.

ஈரான் அணு ஆயுதங்கள் தயாரிப்பதை தடுக்கவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்தது. இந்தத் தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இரு தரப்புக்கும் இடையே தொடர்ந்து நேற்று 7ஆவது நாளாக மோதல் நடைபெற்றது.

இந்த நிலையில், ஈரான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் அணு விஞ்ஞானிகள், இராணுவத் தளபதிகள் உட்பட 585 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. அமெரிக்காவை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டுவரும் மனித உரிமைகள் அமைப்பு வெளியிட்ட தகவல்படி, இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரானில் 585 பேர் உயிரிழந்ததாகவும் 1326 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஈரான் மீது தாக்குதல் நடத்த இன்னும் முடிவு செய்யவில்லை

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவிப்பு

வாஷிங்டன், ஜூன் 20

ஈரான் மீது தாக்குதல் நடத்துவது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

இஸ்ரேலுக்கு எதிராக ஈரான் அணு ஆயுதங்கள் தயாரிப்பதாக குற்றஞ்சாட்டி, கடந்த 13ஆம் திகதி ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதலை தொடங்கியது. ஈரானும் பதிலடியாக தாக்குதலில் ஈடுபட்டது.

இந்த நிலையில், நேற்று 7ஆவது நாளாக இஸ்ரேல் - ஈரான் இடையே மோதல் நீடித்தது. இஸ்ரேல் போர் விமானங்கள், ஈரான் தலைநகர் தெஹ்ரானில் 17ஆம் திகதி இரவிலும் 18ஆம் திகதி அதிகாலையிலும் குண்டு மழை பொழிந்தன.

யுரேனியம் செறிவூட்டும் மையமும் ஏவுகணை உதிரிப்பாகங்கள் தயாரிக்கும் இடமும் தாக்கப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது. ஈரான் துணை இராணுவப் புரட்சிப்படை தலைமையகம் அமைந்துள்ள ஹகிமியே பகுதியிலும் தாக்குதல் நடந்தது. மேற்கு ஈரானில் ஏவுகணை சேமித்து வைக்கும் இடங்களிலும் ஏவுகணை லோஞ்சர் மீதும் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

நேற்று முன்தினம் அதிகாலை 5 மணிக்கு தெஹ்ரானில் அடுத்தடுத்து குண்டு சத்தங்கள் கேட்டன. இஸ்ரேலுக்கு பதிலடியாக, ஈரான் ஏவுகணைகளை அலை அலையாக வீசி தாக்குதல் நடத்தியது. அவற்றில் 10 ஏவுகணைகளை இடைமறித்து அழித்ததாக இஸ்ரேல் இராணுவம் கூறியது.

இதற்கிடையே, ஈரானின் உச்சபட்ச தலைவர் ஐயத்துல்லா அலி கமெனி நிபந்தனையின்றி சரணடைய வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்தார்.

ஆனால், சரணடைய வேண்டும் என்ற ட்ரம்பின் எச்சரிக்கையை கமெனி நிராகரித்தார். மேலும், "இராணுவ ரீதியாக அமெரிக்கா தலையிட்டால், அந்த நாட்டுக்கு சரிசெய்ய முடியாத அளவுக்கு சேதம் ஏற்படும்" என்று கமெனி எச்சரிக்கை விடுத்தார்.

இதேவேளை, ஈரான் இராணுவத் தளபதி அப்துல் ரஹிம் மௌசவி கூறுகையில், "இதுவரை எச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கையாக தாக்குதல் நடத்தினோம். விரைவில், தண்டனை நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" - என்றார். இதனிடையே ஈரானின் அண்டை நாடுகளில் அமெரிக்க இராணுவம் முகாமிட்டுள்ளது. கூடுதல் போர் விமானங்களையும் அமெரிக்கா அனுப்பி வைத்துள்ளது. அமெரிக்க நிலைகளை தாக்கினால், தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, அமைதி காரணங்களுக்காக யுரேனியம் செறிவூட்டும் பணியைத் தொடர்ந்து மேற்கொள்வோம் என்று ஜெனிவாவுக்கான ஈரான் தூதுவர் அலி பஹ்ரெனி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், வெள்ளை மாளிகையில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த ட்ரம்ப், "நான் எதையும் செய்யலாம். செய்யாமலும் இருக்கலாம். அதாவது, நான் என்ன செய்யப் போகிறேன் என்று யாருக்கும் தெரியாது. ஈரான் மீது தாக்குதல் நடத்துவது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை"- என்றார்.

மேலும், இந்தியா - பாகிஸ்தான் விவகாரம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த ட்ரம்ப், "இரு அணு ஆயுத நாடுகளுக்கு இடையேயான போரை நான் நிறுத்தியுள்ளேன். போரை நிறுத்துவதற்கு, பாகிஸ்தான் இராணுவத் தளபதி அசிம் முனீர் முக்கிய காரணம்"- என்றார். (எ)

# சீனாவில் அரசு அதிகாரிகள் விருந்துகளில் பங்கேற்க தடை

பீஜிங், ஜூன் 20

சீனாவில் அரசு அதிகாரிகள் விருந்து நிகழ்ச்சிகளில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் அரசு அதிகாரிகள் அதிகளவில் பணி நிமித்தமாகவும் அலுவலக ரீதியான தொடர்பை தாண்டிய நட்பை வளர்த்துக்கொள்ளவும் சக அதிகாரிகள் மற்றும் தொழிலதிபர்களுடன் இரவு விருந்து நிகழ்ச்சிகளில் பங்குபற்றுகின்றனர். இதனால், ஊழல் குற்றச்சாட்டுகள் பெருகுவதாக புகார்கள் வந்தன. மேலும், விருந்து நிகழ்ச்சிகளுக்கு வரும் அரசு அதிகாரிகள் மர்மமான முறையில் இறந்துவிடுவது அங்கு தொடர்ந்து வருகிறது.

இந்த நிலையில் அரசு அதிகாரிகள் இரவு நேர விருந்து நிகழ்ச்சிகள் மற்றும் கேளிக்கைகளில் ஈடுபட அந்த நாட்டு அரசாங்கம் தடை விதித்துள்ளது. (எ)

# போரை நிறுத்த அமெரிக்கா எந்த பங்கும் வகிக்கவில்லை

## இந்திய பிரதமர் மோடி உறுதி

புதுடில்லி, ஜூன் 20

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போர் நிறுத்த விவகாரத்தில் அமெரிக்கா எந்தப் பங்கும் வகிக்கவில்லை என்று அந்த நாட்டின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்தத் தகவலை இந்திய மத்திய வெளிவிவகாரத் துறை செயலர் விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார். இனிமேலும் அமெரிக்காவின் மத்தியஸ்தத்தை இந்தியா ஏற்காது என்று பிரதமர் மோடி கூறியுள்ளார்.

ட்ரம்புடன் மோடி 35 நிமிட நேரம் தொலைபேசியில் பேசியுள்ளார்.

இந்த உரையாடலின்போது, இந்தியாவின் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கை 'ஒப்ரேஷன் சிந்தூர்' தொடர்ந்து நடைபெற்று வருவதாக ட்ரம்பிடம் மோடி தெளிவுபடுத்தியிருப்பதாக விக்ரம் மிஸ்ரி கூறினார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு விளக்கமளித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு விக்கெட் இழப்புக்கு 203 ஓட்டங்கள் முதல் இன்னிங்ஸில் இலங்கை ஆதிக்கம்

## நிஸ்ஸங்க அதிரடி சதம்

காலி, ஜூன் 20

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 203 ஓட்டங்கள் குவித்து வலுவான நிலையில் உள்ளது. அந்த அணியின் பதும் நிஸ்ஸங்க சதம் அடித்து அசத்தினார்.

இலங்கை - பங்களாதேஷ் அணிகள் இடையிலான 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி காலியில் கடந்த 17 ஆம் திகதி தொடங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி முதல் நாள் முடிவில் முதல் இன்னிங்ஸில் 90 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 292 ஓட்டங்கள் எடுத்திருந்தது. நேற்று முன்தினம் 2ஆவது நாள் ஆட்டம் நடைபெற்றது. நஜ்முல் ஹூசைன் ஷாண்டோ 148 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த லிட்டன் தாஸ், முஷ்பிகுர் ரஹீமுடன் இணைந்தார். இருவரும் துரிதமாக ஓட்டங்கள் சேர்த்தனர்.

மதிய உணவு இடைவேளைக்கு பிறகு மழை பெய்ததால் சுமார் இரண்டரை மணி நேரம் பாதிப்புக்கு பிறகு ஆட்டம் தொடர்ந்து நடைபெற்றது. இதன் பிறகு விக்கெட்கள் வேகமாக வீழ்ந்தன. நிலைத்து நின்று ஆடிய முஷ்பிகுர் ரஹீம் 163 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். 5ஆவது விக்கெட்டுக்கு முஷ்பிகுர் - லிட்டன் தாஸ் 149 ஓட்டங்கள் சேர்த்தனர். அடுத்த ஓவரில் லிட்டன் தாஸ்




90 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெளியேறினார்.

போதிய வெளிச்சம் இல்லாததால் ஆட்டம் முன்கூட்டியே முடித்து கொள்ளப்பட்டது. நேற்று முன்தினம் ஆட்டம் முடிவில் பங்களாதேஷ் அணி 151 ஓவர்களில் 9 விக்கெட்களுக்கு 484 ஓட்டங்கள் குவித்தது. கடைசி 5 விக்கெட்கள் 26 ஓட்டங்களுக்குள் சரிந்தன.

நேற்று 3ஆவது நாள் நடைபெற்றது. இதில், தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 495 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அணி 50 ஓவர்களுக்கு ஒரு விக்கெட் இழப்புக்கு 203 ஓட்டங்கள் எடுத்துள்ளது. பதும் நிஸ்ஸங்க 117 ஓட்டங்களுடனும் தினேஸ் சந்திமால் 54 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (எ)

# ரி - 20 உலகக் கிண்ணம் அட்டவணை வெளியீடு

டுபாய், ஜூன் 20

மகளிர் ரி - 20 உலகக் கிண்ணப் போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

10ஆவது மகளிர் ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் அடுத்த ஆண்டு ஜூன் 12ஆம் திகதி முதல் ஜூலை 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கான அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி.) நேற்று முன்தினம் அறிவித்தது. பர்மிங்காம், சவுத்தாம்டான், ஹெட்டிங்லே, ஓல்ட் டிராப்போர்ட், ஓவல், பிரிஸ்டல், லார்ட்ஸ் ஆகிய இடங்களில் போட்டி நடைபெறவுள்ளன. 24 நாட்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் மொத்தம் 33 போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்த உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்கும் அணிகளின் எண்ணிக்கை 10இல் இருந்து 12 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. அவை இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. குரூப் 1 இல் 6 முறை சம்பியனான அவுஸ்திரேலியா, கடந்த முறை 2ஆவது இடம் பிடித்த தென்னாபிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய அணிகள் இடம் பெற்றுள்ளன. தகுதி சுற்று மூலம் முன்னேறும் 2 அணிகளும் இந்தப் பிரிவில் சேரும்.

குரூப் 2 இல் நடப்பு சம்பியனான நியூசிலாந்து, மேற்கு இந்திய தீவுகள், இலங்கை, போட்டியை நடத்தும் இங்கிலாந்து மற்றும் தகுதி சுற்று மூலம் ஏற்றம் காணும் 2 அணிகள் இடம் பெறும்.

இந்தப் போட்டியில் ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

இந்திய அணி தனது முதலாவது லீக் ஆட்டத்தில் பாகிஸ்தானை ஜூன் 14ஆம் திகதி பர்மிங்காமில் சந்திக்கிறது. அடுத்த ஆட்டத்தில் தகுதி சுற்று மூலம் நுழையும் அணியை ஜூன் 17ஆம் திகதி ஹேட்டிங்லேவில் எதிர்கொள்கிறது. (எ)




# விராட் கோலி இல்லாததால் பென் ஸ்டோக்ஸ் வருத்தம்

லீட்ஸ், ஜூன் 20

இந்திய அணியில் விராட் கோலி இல்லாதது வருத்தம் அளிக்கிறது என்று இங்கிலாந்து வீரர் பென் ஸ்டோக்ஸ் தெரிவித்தார்.

இந்தியா - இங்கிலாந்து அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லீட்சில் இன்று தொடங்குகிறது. ரோஹித் சர்மா, நட்சத்திர வீரர் விராட் கோலி ஆகியோர் கடந்த மாதம் டெஸ்டிலிருந்து விடைபெற்றதால் புதிய தலைவர் சுப்மன் கில் தலைமையில் இளம் வீரர்களை கொண்ட இந்திய அணி இந்த தொடரில் களமிறங்குகிறது.

இந்த நிலையில், டெஸ்டிலிருந்து விராட் கோலி ஓய்வு பெற்றது குறித்து இங்கிலாந்து அணியின் தலைவர் பென் ஸ்டோக்ஸ் கூறுகையில், “இந்த தொடரில் விராட் கோலியின் போராட்ட குணம், உத்வேகம் மற்றும் வெற்றிக்கான ஆர்வம் ஆகியவற்றை இந்திய அணி இழக்கிறது. விராட் கோலியின் 18ஆம் இலக்க சீருடையை இனிமேல் அந்த அணியில் வேறு யாரும் அணிந்திருப்பதை பார்க்க முடியாது என்பது சற்று ஏமாற்றம் தான். ஆனாலும், அவர் அந்த அணியின் வீரர்களுக்கு முன்னுதாரணமாக நீண்ட காலம் இருப்பார்.

விராட் கோலி ஓய்வை அறிவித்த பிறகு நான் அவருக்கு ஒரு குறுந்தகவல் அனுப்பினேன். அதில் உங்களுக்கு எதிராக விளையாட முடியாமல் போவது வருத்தம் அளிக்கிறது என்றும் உங்களுக்கு எதிராக விளையாடுவதை நான் எப்போதும் விரும்புகிறேன் என்றும் தெரிவித்து இருந்தேன். நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் எதிர்த்து விளையாடுவதை விரும்பினோம். ஏனெனில் களத்தில் இருவரது மனநிலையும் ஒரே மாதிரியாக இருந்தது” -என்றார். (எ)

## மக்ஸ்வெல் அசத்தல் ஆட்டம்

# 113 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வாஷிங்டன் அணி அபார வெற்றி

கலிபோர்னியா, ஜூன் 20

113 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வாஷிங்டன் அணி அபார வெற்றி பெற்றது.

6 அணிகள் பங்கேற்றுள்ள 3ஆவது மேஜர் லீக் கிரிக்கெட் போட்டி அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது.

இதில், நேற்று முன்தினம் நடைபெற்ற 8ஆவது லீக் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் வாஷிங்டன் பிரீடம் அணி, லொஸ் ஏஞ்சல்ஸ் நைற் ரைடர்ஸை சந்தித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய வாஷிங்டன் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 208 ஓட்டங்கள் குவித்தது. 6ஆவது வரிசையில் இறங்கி அதிரடியாக விளையாடிய அணித் தலைவர் கிளன் மக்ஸ்வெல் 106 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இதைத்தொடர்ந்து ஆடிய லொஸ் ஏஞ்சல்ஸ் அணி 16. 3 ஓவர்களில் 95 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், வாஷிங்டன் அணி 113 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த நிலையில், ரி - 20 கிரிக்கெட்டில் மக்ஸ்வெல் (அவுஸ்திரேலியா) அடித்த 8ஆவது சதம் இதுவாகும். இதன் மூலம் அதிக சதம் அடித்த வீரர்கள் பட்டியலில் 8 சதங்களுடன் 4ஆவது இடத்தில் உள்ள ரோஹித் சர்மா (இந்தியா), மைக்கேல் கிலின்ஜெர், ஆரோன் பிஞ்ச், டேவிட் வோர்ணர் (மூவரும் அவுஸ்திரேலியா), ஜோஸ் பட்லர் (இங்கிலாந்து) ஆகியோரின் சாதனையை சமன் செய்தார். இந்த வகையில் மேற்கு இந்திய தீவுகளின் கிறிஸ் கெய்ல் 22 சதங்களுடன் முதலிடத்திலும் பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர் பாபர் அஸாம் 11 சதங்களுடன் 2ஆவது இடத்திலும் தென்னாபிரிக்காவின் ரீலி ரோசோவ், இந்தியாவின் விராட் கோலி ஆகியோர் தலா 9 சதங்களுடன் 3ஆவது இடத்திலும் உள்ளனர். (எ)





# இங்கிலாந்து அணி அறிவிப்பு

லண்டன், ஜூன் 20

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடவுள்ள இங்கிலாந்து அணி வீரர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி அந்த நாட்டு அணிக்கு எதிராக 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லீட்சில் இன்று தொடங்குகிறது.

இந்தத் தொடரின் முதல் போட்டிக்கான இங்கிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. பென் ஸ்டோக்ஸ் தலைமையிலான அந்த அணியில் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான கிறிஸ் வோக்ஸ் இடம்பெற்றுள்ளார்.

அந்த அணி விவரம் வருமாறு,

பென் ஸ்டோக்ஸ், ஜாக் கிராலி, பென் டக்கெட், ஓலி போப், ஜோ ரூட், ஹாரி புரூக், ஜேமி ஸ்மித், கிறிஸ் வோக்ஸ், பிரைடன் கார்ஸ், ஜோஷ் டங், ஷோயப் பஷீர் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர். (எ)

# புரோ ஹொக்கி லீக் போட்டியில் இந்திய மகளிர் அணி தோல்வி

லண்டன், ஜூன் 20

புரோ ஹொக்கி லீக் போட்டியில் இந்திய மகளிர் அணி தோல்வியடைந்தது.

9 அணிகள் பங்கேற்றுள்ள 6ஆவது புரோ ஹொக்கி லீக் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில், நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா-ஆர்ஜென்ரீனா மகளிர் அணிகள் மோதின. பரபரப்பான இந்த ஆட்டம் 2 - 2 என்ற கோல் கணக்கில் சமனில் முடிந்தது. இதையடுத்து வெற்றி, தோல்வியை நிர்ணயிக்க நடைபெற்ற பெனால்டி முறையில் இந்திய அணி 0 - 2 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்ரீனாவிடம் தோல்வியைத் தழுவியது. (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நேற்று...

ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையான நிலையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை, 50 ஆயிரம் ரூபாய் பிணை மற்றும் தலா 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான தலா ஓர் ஆள் பிணையில் செல்ல நீதிவான் அனுமதியளித்தார்.

13.4 கோடி ரூபாய் பெறுமதிக்கும் அதிகமான சொத்து விவகாரம் தொடர்பிலேயே மூவரும் கைது செய்யப்பட்டனர்.

இதேநேரம், 9.7 கோடி ரூபாயை சட்டவிரோதமாக கையகப்படுத்தியமை தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய, அவரின் மனைவி, அவர்களின் மகள் என மூவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கைதான மூவரும் பிணை நிபந்தனையை நிறைவேற்றாததாலேயே சிறையில் அடைக்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முன்னாள்...

வைத்து லங்கா புத்ர வங்கியிடமிருந்து கடன் பெற்றுள்ளார். எனினும், அவர் கடனை திருப்பிச் செலுத்தவில்லை.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவரின் முன்னோடிகளில் ஒருவரும் மாதாந்த குத்தகையை குறைத்து பின்னர் அதனை நீக்கினர் என்றும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## தமிழ் அரசின்...

வாக்களிப்பு பகிரங்கமாக நடைபெற்றது. பிரகாஷுக்கு ஆதவராக தமிழ் அரசு கட்சியின் 13 உறுப்பினர் களும் ஈ. பி. டி. பியின் ஓர் உறுப்பினருமாக 14 பேர் வாக்களித்தனர். இதேபோன்று, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் 6 உறுப்பினர்களும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் 6 உறுப்பினர்களுமாக 12 பேர் அபாரசு தனை ஆதரித்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் 5 உறுப்பினர்களும் நடுநிலை வகித்தமையால் தமிழ் அரசு கட்சியின் பிரகாஷ் தவிசாளராகவும் உதயகுமாரன் உபதவிசாளராகவும் தெரிவாகினர். (ஐ)

## வலி.மேற்கு

தமிழ் அரசு கட்சியின் சார்பில் ச. ஜெயந்தன், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் த. சு. நந்தகுமார் ஆகியோர் போட்டியிட்டனர்.

தமிழ் அரசு கட்சியின் ஜெயந்தனுக்கு ஆதரவாக தமிழ் அரசின் 10 உறுப்பினர்களும், ஈ. பி. டி. பியின் 2, ஐக்கிய தேசிய கட்சி, சுயேச்சை குழுவின் தலா ஓர் உறுப்பினருமாக 14 பேருடன் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் ஓர் உறுப்பினருமாக 15 பேர் வாக்களித்தனர் நந்தகுமாருக்கு 7 வாக்குகளும் கிடைத்தன. தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் 4 பேர் நடுநிலை வகித்தனர். பெரும்பான்மை பெற்ற ஜெயந்தன் தவிசாளராக தெரிவானார்.

உப தவிசாளர் தெரிவிலும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட கந்தையா இலங்கேஸ்வரன் தெரிவானார்.

இதனிடையே, தமிழ் அரசு கட்சிக்கு ஆதரவாக வாக்களித்த மா. குமார், தான் தவறுதலாக கட்சி மாறி வாக்களித்துவிட்டேன். அதனை நீக்கவேண்டும் என்று கோரினார் எனவும் அளித்த வாக்கை மாற்றமுடியாது என்று உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்திருந்தார் என்றும் கூறப்பட்டது.

இதனிடையே, தமிழ் அரசு கட்சிக்கு ஆதரவாக வாக்களித்த உறுப்பினரை ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி கட்சி இடைநிறுத்தியுள்ளதுடன், அவரிடம் விளக்கம் கோரி கடிதமும் அனுப்பியுள்ளது. (ஐ)

# மனித புதைகுழிகளின் அகழ்வுக்கு பிரிட்டன் ஆதரவளிக்கவேண்டும்!

**பிரிட்டனின் தமிழ் எம். பி. உமா**

லண்டன், ஜூன் 20

சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப குறித்த மனிதப் புதைகுழிகளை தோண்ட இலங்கையில் போதுமான வளங்கள் இல்லை என்று பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் உமா குமரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மனித புதைகுழி அகழ்வு பணிகளுக்கும் அது தொடர்பான முழுமையான விசாரணைக்கும் பிரித்தானிய அரசாங்கம் ஆதரவை வழங்க முன்வர வேண்டும் என்று பிரித்தானிய வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி பணிமனையின் செயலாளருக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

செம்மணியில் மூன்று குழந்தைகள் உட்பட்ட பலரின் மனித எச்சங்கள் மீட்கப்பட்ட கொடூரம், உண்மையிலேயே அதிர்ச்சியூட்டுகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, "போர் குற்றங்களில் ஈடுபட்டவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்ற தமது கோரிக்கையை பரிசீலிக்க வேண்டும். உயிர் பிழைத்தவர்களுக்கும், இன்னும் பதில்களை தேடும் குடும்பங்களுக்கும் இந்தக் குற்றங்களின் நிழலில் வளரும் அடுத்த தலைமுறைக்கும் நாம் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம்", என்றும் அந்தக் கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# போதைப்பொருளுடன் சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 20

குருநகர் மருத்துவமனை முன்பாக கஞ்சா கலந்த மாவா வைத்திருந்த 19 வயது இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், குருநகர் பொலிஸ் காவலரணில் கடமையில் இருந்த பொலிஸார் சந்தேகநபரை கைது செய்தனர்.

கைதான சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-

## வீடமைப்பு...

சஜித் பிரேமதாஸ வீடமைப்பு மற் றும் நிர்மாணத்துறை அமைச்சராக பதவி வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## காரைநகர்...

கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஐக்கிய தேசிய கட்சி, தேசிய மக்கள் சக்தி என்பன தலா 2 ஆசனங்களையும் இலங்கை தமிழ் அரசு கட்சி ஓர் ஆசனத்தையும் கடந்த உள்ளூராட்சி தேர்தலில் கைப்பற்றியிருந்தன.

இந்த நிலையில் சுயேச்சை குழு, தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய பேரவை என்பன தலா 16 மாதங்களுக்கு தவிசாளர் பதவியை வகிப்பது என்ற உடன்பாட்டுக்கு வந்தன. இதன் பிரகாரமே தவிசாளர், உபதவிசாளர் பதவிக்கான தெரிவுகள் போட்டியின்றி ஒருமனதாக நடைபெற்றன. (ஐ)

## கடலுக்கு...

மிதந்து வந்துள்ளது. இதை அவதானித்த மீனவர்கள் அவரின் குடும்பத்தவர்களுக்கு தகவல் தெரிவித்துள்ளனர். அத்துடன், காணாமல் போன மீனவரை தேடும் பணியில் சக மீனவர்கள் ஈடு பட்டனர்.

இதனிடையே, மீனவரின் குடும்பத்தவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். பொலிஸாரின் விசாரணையில், மீட்கப்பட்ட படகில் அவரின் சாரம் காணப்படுவது தெரியவந்தது. படகின் இயந்திரத்தில் மற்றொரு படகு மோதியதற்கான அடையாளம் காணப்படுவதுடன், படகில் இரத்தகறைகளும் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே மீனவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று மீனவர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ஐ)

# பிரிக்ஸ் அமைப்பில் இணைய இலங்கை விண்ணப்பித்தது!

கொழும்பு, ஜூன் 20

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் உலகளாவிய கூட்டாண்மைகளை ஆழப்படுத்துவதற்கான ஒரு மூலோபாய நடவடிக்கை முறையாக இலங்கை பிரிக்ஸ் கூட்டணியில் சேர விண்ணப்பித்துள்ளது.

வர்த்தகம் மற்றும் சுற்றுலாவை விரிவுபடுத்தும் சூழலில், இலங்கையின் வளர்ச்சிப் பாதையில் பிரிக்ஸ் உறுப்புரிமை முக்கியத்துவத்தை சுற்றுலா துறை பிரதி அமைச்சர் ருவான் ரணசிங்க வலியுறுத்தினார்.

"தெற்காசிய பெருங்கடலில் மூலோபாய ரீதியாக அமைந்துள்ள நாடாக இலங்கைக்கு பிரிக்ஸ் ஒரு முக்கிய வாய்ப்பைக் குறிக்கிறது. எங்கள் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தவும் ஐரோப்பிய ஒன்றியத்துடனான ஒப்பந்தங்கள் உட்பட எங்கள் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை பயன்படுத்தவும் நாங்கள் விளைகிறோம்.

இலங்கை தற்போது ஜி. எஸ். பி. பிளஸ் வரிச் சலுகைகளால் பயனடைகிறது. இந்தியாவுடனான எவ். ரி. ஏ திட்டத்தின் கீழ் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தயாரிப்புகளை அணுகுகிறது. இது சர்வதேச வர்த்தகத்துக்கான ஒரு கவர்ச்சிகரமான மையமாக அமைகிறது. பிரிக்ஸ் உறுப்புரிமை இலங்கையின் தளத்தின் மூலம் உறுப்பு நாடுகள் இந்த நன்மைகளை அனுபவிக்க அனுமதிக்கும் - என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

# கிழக்கில் காணி விடுவிப்பு; ஜனாதிபதியின் கவனத்துக்கு

கொழும்பு, ஜூன் 20

கிழக்கு மாகாணத்தில் காணிகளை விடுவிப்பது தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப் பட்டுள்ளது.

பாதுகாப்பு அலுவல்கள் அமைச்சு சார் ஆலோசனைக் குழு பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் கடந்த 17ஆம் திகதி கூடிய போதே இந்த விடயம் அவரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

வடக்கு, கிழக்கில் காணிகளை விடுவிப்பது தொடர்பான பிரச்னைகள் போன்ற பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புடைய பல்வேறு பிரச்னைகளை பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். இதன்படி, நியாயமான கோரிக்கைகளை பரிசீலித்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்குத் தேவையான அறிவுறுத்தல்களை ஜனாதிபதி வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில் சாணக்கியன் பின்வரும் விடயங்களை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் காயங்கேணி பிரதேசத்தில் உள்ள பாடசாலைக்கு அருகில் இராணுவத்தினர் ஓய்வு விடுதி ஒன்றை நிர்மாணித்துள்ளதோடு, இது தொடர்பில் நாம் வினாவிய போது, அந்த ஓய்வு விடுதியை அகற்ற முடியாது என இராணுவம் அறிவித்ததாக அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் முறக்கொட்டாஞ்சேனையில் உள்ள பாடசாலை, பாலயடிவத்தை பிரதேசத்தில் உள்ள வர்த்தக சந்தை, குருக்கள்மடம் பகுதியில் உள்ள பாடசாலை இன்றளவிலும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றது. தாண்டியடி விசேட அதிரடிப்படை முகாம் மயானம் அமையப்பெற்றுள்ள காணியிலும், களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையம் தனியாருக்கு சொந்தமான காணியிலும் அமையப்பெற்றுள்ளது.

வாகரை பிரதேசத்தில் கடல்படையினரினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பது தொடர்பாகவும் அதில் எவ்வளவு காணி பயன்படுத்தப்படுகின்றது என்பது தொடர்பாகவும் சரியான புரிதல் இல்லை என்பதுடன், வாகரை பிரதேசத்தில் அதிகளவான காணிகள் கடல்படையினருக்கு சொந்தமாக காணப்படுவதால், அந்தக் காணிகளை விடுவிக்க வேண்டும் எனவும் கோரிக்கைகளை முன்வைத் தேன்.

இந்தக் காணிகள் தொடர்பான விடயங்கள் விரிவாக ஆராயப்பட வேண்டும் என்பதால் இது தொடர்பான விசேட குழுவொன்றை நியமிக்குமாறு சாணக்கியன் கேட்டிருந்தார்.

ஆலையடி பிரதேசத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையும் இராணுவ முகாமிற்குள் அமைந்து காணப்படுவதுடன், இராணுவ முகாமிற்குள் அமைந்துள்ள சில பாடசாலைகளுக்கு பதிலாக மாற்றுப் பாடசாலைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள போதிலும் அவை கிராமத்திற்கு வெளியில் அமைந்துள்ள காரணத்தால் பல சிக்கல்களை மாணவர்கள் மற்றும் ஊர் மக்கள் சந்திக்கின்றனர்.

அனைத்து இராணுவ முகாம்களும் அமைந்துள்ள காணிகள் குறித்து மீளப் பரிசீலனை செய்து அறிக்கை வழங்குமாறு அறிவித்துள்ளதாகவும், அந்த அறிக்கை கிடைத்தவுடன் அதன் அடிப்படையில் மீண்டும் கலந்துரையாடல் நடத்தப்படும் எனவும் ஜனாதிபதி அறிவித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# பங்குசந்தை தொடர்ந்து வீழ்ச்சி!

கொழும்பு, ஜூன் 20

கொழும்பு பங்குச் சந்தை தொடர்ந்து ஐந்தாவது நாளாக நேற்று வியாழக்கிழமையும் வீழ்ச்சியை பதிவு செய்தது.

கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் மொத்த பங்கு விலைச்சுட்டெண் 16,818.21 புள்ளிகளாக பதிவானது.

கொழும்பு பங்கு பரிவர்தனை நேற்றைய தினம் கொடுக்கல் வாங்கல்களின் மூலமாக மொத்தமாக 330 கோடி ரூபாயை வருவாயாக ஈட்டியது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

எமது பயணம் தொடரும்!

## அரசாங்கத்தின் ஒடுக்குமுறையை எதிர்கொள்ள தயார் என்கிறார் நாமல்

கொழும்பு, ஜூன் 20

" அரசாங்கத்தின் ஒடுக்கு முறைக்கு முகங்கொடுக்க தயார். எமது அரசியல் பயணத்தை நிறுத்தப்போவதில்லை." என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

"பொதுஜன பெரமுன கட்சி வெளிப்படையான அரசியலையே முன்னெடுக்கின்றது. எமக்கு எந்தவொரு தரப்புடனும் டீல் கிடையாது. நாம் தனிநபர்களுடன் பேச்சு நடத்தமாட்டோம். கட்சிகளுடன்தான் எமக்கு கொடுக்கல், வாங்கல் உள்ளது.

அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளை ஒடுக்கி தமது அரசியல் பயணத்தை முன்னெடுக்க அரசாங்கம் முற்படுமானால் அதற்கு முகங்கொடுப்பதற்கு நாம் தயார். இந்நாட்டில் எமது அரசியல் பயணம் தொடரும்.

ஐக்கிய தேசியக் கட்சியால் அடக்குமுறைக்கு உள்ளான கட்சிதான் ஜே.வி.பி. எனவே, அடக்குமுறையின் தாக்கம், அதனால் ஏற்படும் விளைவுகள் என்னவென்பன பற்றி தற்போதைய அரசாங்கத்துக்கு நன்கு தெரியும்-என்றார். (அ)

## தீவிரமாகும் டெங்கு தொற்று!

கொழும்பு, ஜூன் 20

டெங்கு நோயினால் கடந்த ஆண்டில் மாத்திரம் நாட்டில் 14 மரணங்கள் பதிவாகியுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் பிரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

அத்துடன், குறித்த காலப்பகுதியில் 26,775 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைக்கும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேல், சப்ரகமுவ, தென் மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகளவில் பதிவு செய்யப்படுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நிலவும் மழையுடனான வானிலை காரணமாக நுளம் புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. எனவே, தங்களது குடியிருப்புகள் மாத்திரமன்றி பணியிடங்கள், மதஸ்தலங்கள் மற்றும் தங்களது பிள்ளைகள் செல்லும் பாடசாலைகள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் நுளம்பு பெருகுவதற்கான சூழல் காணப்படுமாயின், அது தொடர்பில் அவதானமாகச் செயற்படுமாறும் அவர் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளார்.

வாரத்திற்கு ஒருமுறையேனும் சுற்றுச்சூழலைச் சுத்தப்படுத்தி டெங்கு நுளம்புகள் பரவுவதனை கட்டுப்படுத்துமாறு தேசிய டெங்கு கட்டுப்பாட்டு விசேட வைத்திய நிபுணர் பிரஷீலா சமரவீர வலியுறுத்தியுள்ளார். (அ)

## இந்தியாவுக்குள் நுழைந்த இலங்கையர் இருவர் கைது!

சென்னை, ஜூன் 20

போலியான இந்திய கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தி இந்தியாவுக்குள் நுழைந்ததாகக் கூறப்படும் இலங்கையைச் சேர்ந்த ஒரு தாயும் மகளும் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த திங்களன்று அவர்கள் சென்னையை அடைந்த நிலையில், இந்திய குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் ஆவணங்களை ஆய்வு செய்துள்ளனர்.

இதன்போது, 48 வயது பெண்ணும் அவரது 21 வயது மகளும் சென்னை முகவரியுடன் கூடிய இந்தியக் கடவுச்சீட்டுக்களை வைத்திருப்பது கண்டறியப்பட்டது.

இந்தநிலையில், சுற்றுலா விஸாவில் இலங்கைக்குச் சென்றதாகக் கூறிய இருவரும் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து இருவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பதும், கடந்த சில ஆண்டுகளாகச் சென்னையில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்ததும் உறுதி செய்யப்பட்டது.

அத்துடன், இந்தியாவில் அடையாளச் சான்றுகளைப் பெற அவர்கள் போலி ஆவணங்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. (அ)

# ஜனாதிபதியின் ஜேர்மனி விஜயம் குறித்து அவதூறு!

### சி.ஐ.டி விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 20

**அண்மையில் ஜேர்மனிக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க குறித்து தவறான மற்றும் வெறுப்பூட்டும் தகவல்களை வெளியிட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி நீதிமன்றத்திற்கு அறிக்கை அளிக்குமாறு கொழும்பு தலைமை நீதவான் நீதிமன்றம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளது.**

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை பரிசீலித்த பின்னர், கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி ஜயதுங்க இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளர் ஜி.சுபாஷ் சமிந்த ரோஷன் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து, இது தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி தனது ஜேர்மனி விஜயத்தின்போது விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரைச் சந்தித்தார் என முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

அவரின் இந்த அவிறிப்பு பல்வேறு ஊடகங்கள் மற்றும் இணையத்தில் வெளியாகியிருந்ததாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் சங்கடப்படுத்தும் நோக்கில் இந்தக் கருத்து வெளியிடப்பட்டதாகவும், இது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் மேலும் தெரிவித்துள்ளது.

அதன்படி, சம்பவம் குறித்து விசாரணை நடத்த உத்தரவிட்ட நீதவான், விசாரணையின் முன்னேற்றத்தை நீதிமன்றத்திற்கு தெரிவிக்கவும் உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ரஷ்யாவில் ரணில் ஜி7 இற்கு எதிர்ப்பு

### ப்ரிக்ஸ்'க்கு ஆதரவு

கொழும்பு, ஜூன் 20

தற்பாதுகாப்புக்காக, இஸ்ரேல் - ஈரான் மோதல்களை நியாயப்படுத்தும், ஜி7 நாடுகளின் நிலைப்பாடு ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல என்று ரஷ்யா சென்றுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும்போதே, ஈரான் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கவையல்ல என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இந்த தாக்குதல்களை, ஜி7 நாடுகளின் குழு நியாயப்படுத்துவதும் ஏற்கத்தக்கதல்ல என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் சென். பீட்டர்ஸ்பேர்க்கில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின்போது அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இந்தநிலையில், அதிக பிரதிநிதித்துவத்தை வழங்கும் வகையில், ஜி7 அமைப்பை இரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாக ஜி20 நாடுகளின் குழுவை அங்கீகரிக்க வேண்டும் என்றும் ரணில் அழைப்பு விடுத்துள்ளார்.

இதற்கிடையில் ரஷ்யாவை முன்னிலையாகக் கொண்ட பிரிக்ஸின் வகிபாகமும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

## காங்கேசன்துறை-நாகை கப்பல் சேவை வழமைக்கு திரும்பியது!

சென்னை, ஜூன் 20

நாகை-காங்கேசன்துறை இடையே கடல் சீற்றம் கார ணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்ட கப்பல் சேவை நேற்று முன் தினம் மீண்டும் ஆரம்பமானதாக தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நாகை துறைமுகத்திலிருந்து காங்கேசன்துறைக்கு கடந்த 2023 ஒக்ரோபார் முதல் பயணிகள் கப்பல் இயக் கப்பட்டு வருகிறது. சுபம் என்ற தனியார் நிறுவனம் மூலம் 'சிவகங்கை' பயணிகள் கப்பல் சனிக்கிழமைகளை தவிர ஏனைய நாள்களில் இயக்கப்பட்டு வருகிறது.

பருவநிலை மாற்றம் காரணமாக கப்பல் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்படுவது வழக்கம். அந்தவகையில், கடல் சீற்றம் மற்றும் வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கையை அடுத்து ஜூன் 13ஆம் திகதி முதல் கப்பல் சேவை நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கையை திரும்பப் பெற்றது. இதையடுத்து, காங்கேசன்துறைக்கு கப்பல் சேவை நேற்று முன் தினம் காலை வழக்கம் போல் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதைத் தொடார்ந்து, சிவகங்கை கப்பல் 95 பயணிகளுடன் புறப்பட்டு காங்கேசன்துறைக்கு சென்றடைந்து. பின்னார், இலங்கையிலிருந்து 108 பயணிகளுடன் பிற்பகல் புறப்பட்ட கப்பல் மாலையில் நாகை துறைமு கத்துக்கு திரும்பியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

பொலிஸ் நிலையத்தில் சித்திரவதை

# ரூ. 2 மில்லியன் இழப்பீடு வழங்க இரண்டு பொலிஸாருக்கு உத்தரவு!

கொழும்பு, ஜூன் 20

2019 ஆம் ஆண்டு சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்ட ஒருவருக்கு ரூ.2 மில்லியன் இழப்பீடு வழங்குமாறு உரகஸ்மன்ஹந்திய பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் இரண்டு பொலிஸ் அதிகாரிகளுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிபதி ஷிரான் குணரத்ன இந்த தீர்ப்பை வழங்கினார், நீதிபதிகள் எஸ். துரைராஜா மற்றும் ஏ.எச். எம்.டி. நவாஸ் ஆகியோர் இந்த தீர்ப்பை ஏற்றுக்கொண்டனர். உரகஸ்மன்ஹந்திய பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஹரித் மற்றும் குற்றப்பிரிவுகளின் பொறுப்பதிகாரி ஹிரன் ஆகிய இருவருக்கும், இழப்பீட்டை நேரில் செலுத்த வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. தீர்ப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள் இந்த பணம் முழுமையாக வழங்கப்பட வேண்டும்.

பெந்தோட்டவின் மிரிஸ்வத்தவில் உள்ள பொருட்கள் விநியோக நிறுவனத்தில் பணியமர்த்தப்பட்ட விற்பனை பிரதிநிதியான மனுதாரர், அரசியலமைப்பின் பிரிவுகள் 11, 12(1), 13(1) மற்றும் 13(2) இன் கீழ் தனது அடிப்படை உரிமைகளை இரண்டு அதிகாரிகளும் மீறியதாகக் குற்றம் சாட்டினார். பெந்தாரவில் உள்ள பொருட்கள் விநியோக நிறுவனத்தில் வழக்கமான விநியோகத்துக்கு பிறகு மனுதாரரும் ஒரு சக ஊழியரும் தங்கள் நிறுவனத்திற்குத் திரும்பிய பிறகு, ஜூன் 21, 2019 அன்று இந்த சம்பவம் நிகழ்ந்தது.

பொருட்களை இறக்கும்போது கடையில் இருந்து நகைகளைத் திருடியதாக சந்தேகத்தின் பேரில் தானும் சாரதி சம்பத்தும் கைது செய்யப்பட்டதாக மனுதாரர் கூறினார். பொலிஸ் காவலில் இருந்த போது தான் எவ்வாறு கொடூரமான மற்றும் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டார் என்பதை அவர் விவரித்தார்.

மனுவின்படி, முதல் பிரதிவாதி ஹரித் மற்றும் இரண்டாவது பிரதிவாதி ஹிரன் ஆகியோர் வாக்குமூலம் பெறும் முயற்சியில் கடுமையான உடல் மற்றும் மன துன்பங்களை பிரயோகித்தனர். கைக்குண்டு வைத்திருப்பது உள்ளிட்ட சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளால் மனுதாரர் அச்சுறுத்தப்பட்டார். இந்தத் தாக்குதல்கள் மனுதாரரை நீடித்த உடல் குறைபாடு மற்றும் ஊனமுற்றவராக மாற்றியது என கூறப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.